# சுடர்

கலை இலக்கியத் திங்கள் இதழ்



ஆனி - ஆடி '83 ரூபா 2.50

# வாசகர் வாய்மொழி

## ன்று போல் என்றும் வாழ...

ன் இனிய சுடரே!
என்றும் புத்தம் புதிய அம்சங்களையும் எழில்
கொண்ட அட்டைப்படத்தையும் தாங்கிவந்து
ம்மை கவர வைக்கும் சுடரே!
ங்கள் ஈழத்து கவிஞர்களுக்கு ஊக்கமளிக்
தும் என் அன்பு சுடரே!
இன்று போல் என்றும் வாழ என்
அன்பு முத்தங்கள்.

செல்வி. சுமதி. நடேசபிள்ளை, யாழ்ப்பாணம்.

* * *

## மலா நேருவின் குறுஞ்சரிதம்

சித்திரை - வைகாசிச் சுடரைப் பொறுத்த
ரை ஆழக்கண்ணோட்டமே அதிகம் தேவை
யுள்ளது. ஐனரஞ்சகம் மிகக் குறைவே.
பெண்ணானவள் அடங்கி வாழப் பிறந்தவ
ல்ல கொடுமைகளை எதிர்த்து அடக்கவும்
றந்தவள் என்பதை கமலா நேருவின் வீர
கு குறுஞ்சரிதம் போதிக்கின்றது. 'கள்ளம்
படமற்ற; திறந்த மனத்தினனாய் நீயிரு
கனே' என்ற உள்ளார்த்தத்துடன் தலாட்டுப்
ாடிய புதுவையின் கவியோட்டம் புதுமை
ானது, இரத்தினவேலோன் ஆண்மைக்கே
ான திடசித்தத்தை; யதார்த்தக் கலப்புடன்
தையுருவாக்கி இடைநிறுத்த கோகிலா
கேந்திரன் பெண்மைக்கேயான பலவீனங்களை
னம் காட்டி மேலான மன உணர்வுகளை
ட்டியெழுப்பும் வகையில் 'முற்றுப்புள்ளி'
வத்திருக்கின்றார். கொக்கூர் கிழானின்
ிரிந்திடவே வேண்டுமடா' கருத்துச் செறி
டன் சுதந்திர வேட்கையை ஊட்டும்; கனச்
ருக்கமான கவிதையாக அமைந்து வருகின்
து.

ஆர். மல்லிகை வண்ணன், ஏறாவூர்-4.

* * *

## ரர் வரிசையில் கமலா நேரு

சுடரிதழ் என் கரந்தனில் மல
மகிழ்வுற்றேன். சுடர் இப்போ
வருகிறதே! இருந்தும் இதி
க்குரிய ஆக்கங்களுக்கே இட
க்கங்களையாவது அதிகரித்
துள்ளாயா, அதுவும் இல்லையே சுடரே உனக்கு
என்ன கஷ்டமோ? எவ்விடர்வரினும் ஒவ்வொரு
மாதமும் எனது அமுதச் சுடர் ஒளிதர வேண்
டுமென்பதே சுடர் வாசகியின் அன்புக் கட்
டளை ஏற்பாயா?

வன்னிவதை கவிதையில் அங்கு நடந்த
வதைகளை நேரில் பார்ப்பதுபோல் அமைதுள்
ளது. துன்பந்தான் மனிதனின் எல்லை என்ற
அறிவியல் கட்டுரையில் எல்லோருக்கும்
தேவையான அறிவுரைகளைத் தந்துள்ளார்.
கட்டுரை ஆசிரியைக்கு எனது நன்றிகள்.

அறுவை ஒரே அறுவைத்தான். 'தாய்மை
"கதையில் திலீப் போல் நடைமுறையில்
இருப்பார்களா? வீரர் வரிசையில் "கமலா
நேரு"வின் அனுபவங்களை வாசித்தறிந்தேன்.
உண்மையில் விடுதலை வேண்டி நிற்கும். ஈழத்
தமிழ்ப்பெண்கள் படித்து பின்பற்ற வேண்டிய
வரலாறுதான்.

செல்வி. பரமேஸ் பழனிவேல்

* *

## சிறுவருக்காக ஒரு பக்கத்தையாவது...

சுடரே உன்னில் வரும் அம்சங்கள்
அனைத்தும் பெரியவர்களுக்காகவே அமைந்
துள்ளன. இதனால் என்போன்ற சிறுவர்க
ளால் உன்னை வாசித்து மகிழ முடியாதி
ருக்கின்றது. ஆகவே அன்பான சுடரே நீ
என்போன்ற சிறுவருக்காக ஒரு பக்கத்தை
யாவது ஒதுக்கினால் நாம் அடையும் மகி
ழ்ச்சிக்கு எல்லையே இருக்காது. மேலும்
எங்கள் ஆக்கங்களையும் எழுதி அனுப்ப
உதவியாக இருக்குமல்லவா.

செல்வன்:-இ. சிறீகரன் சாவகச்சேரி

* * *

## அங்கவீனம் சிரிப்புக்குரியவையல்ல

என்றும் போல் நடுப்பக்கத்தை அலங்க
ரிக்கும் சவிச்சரங்கள் மணக்கின்றன. இளைய
தலைமுறையினரை இனம் காட்டும் "இலக்கி
யச் சோலை" வளரட்டும். 'அறுவையை
அளந்து போடவும். ஏனெனில் அங்கவீனம்
நையாண்டிக்கும் சிரிப்புக்குமுரியவையல்ல.
கோகிலா மகேந்திரனின் பயனுள்ள அறிவியல்
கட்டுரையை அடுத்து. அருண் விஜயராணி
யின் "தாய்மை" எல்லாத்தாய்மாருக்கும்
எழும் இயற்கை உணர்வுகளின் பிரதிபலிப்பா
கவும் ஆண்களின் புரிந்துணரா தன்மையை
யும் சித்திரித்துள்ளது. "முற்றுப்புள்ளிகள்'
பரிசுக்கதை உறுதி குலையாத மனவடக்கத்தினை
எழுச்சியோடு வடிக்கப்பட்டிருக்கிறது. சிறு
கதை ஆசிரிய ஆசிரியைகளுக்கு என் மனமிகு
பாராட்டுக்கள். சுடர் இதழின் தாமதம்
போதாதென்று ஏன் இத்தனை மெலிவு? ஆக்
கங்கள் அக்கப் போராய் குவிந்திருக்கையில்
கொஞ்சம் 'அட்ஜெட்' செய்து கொண்டா
லென்ன?

செல்வி கங்கா - மங்கை
சரசாலை, சாவகச்சேரி

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு: 2013
சுடர்: 9
ஒளி: 3, 4
ஆனி — ஆடி 1983.
தொடக்கம்: சித்திரை 1975

வெளியீடு:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

# போலிப் போர்வையை உதறித் தள்ளுக

தமிழர்களை அடித்து உதைத்து அரிவாளால் வெட்டி இரத்த அபிசேகம் பண்ணும் சிங்கள காட்டேரிகளின் வருடாந்த திருவிழா இந்த வருடமும் மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. சிற் சில இடங்களில் இன்னமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சிங்களப்பகுதிகளில் மட்டுமல்ல, தமிழர்களின் தாயகமான வன்னியிலும் திருமலையிலும் கூட தமிழர் சங்காரம் நடைபெற்றிருக்கிறது. ஸ்ரீலங்கா அரசின் பயங்கரவாதிகளும், காடையர்களும் தமிழ் மண்ணை எரிப்பதிலும் தமிழர்களை அடித்து துன்புறுத்துவதிலும் தம் 'கடமை'யை செவ்வனே நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதை தடுத்து நிறுத்தி நடவடிக்கை எடுக்கும் சக்தி ஸ்ரீலங்கா ஆட்சியாளர்களிடம் இருப்பதாகவே தெரியவில்லை.

வாயைத் திறந்தால் தேனொழுக இனிக்க இனிக்கப் பேசுகிறார்கள். இன ஒற்றுமை இன ஒற்றுமை என்று மேடைதோறும் உச்சாடனம் பண்ணி வருகிறார்கள். ஆனால் உருப்படியாக - உறுதியான நடவடிக்கை எதனையுமே மேற்கொண்டதாக தெரியவில்லை.

திருகோணமலையில் வெறியாட்டம் நடத்தி பிடிபட்ட சிங்கள காடையர்களை, எவ்வித நடவடிக்கையும் எடுக்காது விடுதலை செய்கிறார்களாம் பொலிஸார். காடைத்தனத்துக்கு உந்துசக்தியாக அதன் பின்னணியில் நின்றவர்களே இவர்கள்தானோ என்ற சந்தேகம் இதன் மூலம் ஊர்ஜிதமாகிறது.

தமிழர்களை வெட்டிச் சாய்ப்பதோ, அன்றி அவர்களின் உடைமைகளை எரித்து உடைப்பதோ அல்லது அனாதரவாக வீதியில் செல்லும் தமிழ் இளைஞர்களை சுட்டு வீழ்த்துவதோ அப்படி ஒன்றும் பாரதூரமான குற்றங்கள் அல்ல என்கிற அளவுக்கு- ஒரு கொடிய சூழ்நிலையை உருவாக்கிவிட்டு வாய் இனிக்க இனிக்கப் பேசுகிறார்களே! இதுவா தார்மீகம்?

எமக்கிழைக்கப்படும் இக்கொடுமைகளை சகிக்கவொண்ணாது, ஈழத்தமிழ் மக்களுக்காக தன் இன்னுயிரையே அக்கினிக்கு தாரை வார்க்க முன்வந்த தமிழக இளைஞர் சாஷகானின் நெஞ்சழுத்தத்தை எண்ணும்போது எத்துணை வியப்பேற்படுகிறது.

அனைத்திந்திய மக்களின் கவனத்தையும் எம்மீது திசை திருப்பிய அந்தவீர இளைஞனின் உடல் நலம் தேற இறையருளை வேண்டி நிற்பதோடு — இனியாவது எமதருமைத்தலைவர்கள், இதுகாலவரை போர்த்தி வந்த போலிப் போர்வையை விலக்கிவிட்டு, அஞ்சாநெஞ்சோடு, வாய்ப்பேச்சில் மட்டும் வீரத்தைக் காட்டாது செயலிலும் காட்டி எமக்கு நிரந்தரமான விடிவை ஏற்படுத்தும் பணிகளில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென மிக விநயமாக வேண்டுகிறோம்.

ஒரு குடுகுடுப்பையின் உளறல்:

# காலபலன்கள்

சிம்மம்

## திரு. சு. நடராசா:

ஜென்மத்தில் ராகு இருப்பதனாலும் தொடர்ந்து அதே இடத்தில் கேது வருவதனாலும் நெஞ்சத்தில் இருக்கும் விடுதலை உணர்வுகள் படிப்படியாக தேய்ந்து குறைந்து, வெறும் அபிவிருத்தி சபைகளே சர்வ வல்லமையுள்ள அதிகார சபைகளாக தோற்றமளிக்கும். இந்த மாயத்தோற்றம் சுபசகுன அறிகுறிகளாக தெரியவில்லை. இதனால் வரும் மா. அ. சபை தேர்தற் காலங்களில் வீட்டிலேயே அடைந்து கிடக்க வேண்டியேற்படும். நல்லூர்க் கந்தனுக்கு பன்னீர்க் காவடி எடுத்தாலும் பயன் ஏதும் விளையப் போவதில்லை. நா காத்தல் நன்மை பயக்கலாம்.

## திரு. அ. அமிர்தலிங்கம்

ராகு ஆறில் மாறுவது போட்டிகளில் வெற்றியையும் சத்துரு ஜெயத்தையும் கொடுத்தாலும், சுய கட்டுப்பாட்டை இழக்கும் நிலை ஏற்படலாம். ஏகபோக தலைமைத்துவம் ஆட்டம் காணுமளவுக்கு மக்கள் மத்தியில் சிந்தனை மாற்றம் ஏற்படும். ஸ்ரீலங்கா 'ஆதி மூர்த்தி'யை அடிக்கடி தரிசிப்பதை விடுத்து ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டால் அபிலாஷைகள் நிறைவேறலாம். தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல தங்களுக்கும் இது சோதனையான காலம். இளைஞர் கருத்துக்களை புறக்கணியாது இதயசுத்தியுடன் கருமங்களில் ஈடுபடுக! வெற்றி நிச்சயம் கிட்டும். உட்பகை தீர கீரிமலை திருத்தலத்தில் தீர்த்தமாடினால் நன்று.

## திரு. குமார் பொன்னம்பலம்

மிதுனத்தில் இராகுவும் செவ்வாயும் பிரவேசித்துள்ளதால் 'அகில இலங்கை' புகழ் கிடைத்துள்ளது. கொஞ்சகாலம் அரசியல் நாடகத்தில் கனகச்சிதமாக நடித்து வருவீர். காலப் போக்கில் 'கதாநாயகன்' என்ற மாயத் தோற்றம் நீங்கி சுய உருவம் தெரிய வரும். 'எட்டாத பழம் புளிக்கும்' என்ற நிலைதான் தற்போது நடைபெற்று வருகிறது. பின்னர் ஏணி வைத்து 'பழத்'தைப் பெற முயற்சி செய்வீர். ஆனாலும் அபிலாஷைகள் நிராசையாகலாம். கதிர்காமக் கந்தனுக்கும், கப்பித்தாவத்தை விநாயகருக்கும் மட்டுமல்லாமல் 'அகில இலங்கை' எங்கணுமுள்ள திருத்தலங்களையும் தரிசித்து நைவோத்திரம் செய்து வந்தால் மனமும் அரசியலும் சுத்தமாகலாம் முயற்சி பண்ணுக.

## திரு. நீலன் திருச்செல்வம்:

தனுவில் கேது, சந்திரன் கன்னி முதல் தனு ஈறுகச் சஞ்சரிப்பதால் ஆரம்பத்தில் ஏற்பட்ட புகழ் செல்வாக்கு எல்லாம் குறைந்து மதிப்பிறக்கம் ஏற்படுவதோடு மக்கள் மத்தியில் ஸ்ரீலங்கா ஏகாதிபத்திய அரசின் அடிவருடி என்ற சந்தேகம் படிப்படியாக தோன்றி வரலாம். இதனால் எதிர்கால உச்ச வாழ்வுக்கு குந்தகங்கள் விளையும். மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு அதிகாரங்கள் கோருவதை விடுத்து தமிழ் மக்களின் இறைமையை நிலை நாட்டும் பணிகளில் ஈடுபட்டால் பெருவாழ்வு கிட்டும். திருநீலகண்டரை தரிசித்து தினமும் வணங்கி வந்தால் மனோ நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு நினைத்த காரியங்கள் நிறைவேறும்.

## திரு. கே. டபிள்யு. தேவநாயகம்

ராகு, கேதுக்கள் விருச்சிகத்திலும் இடபத்திலும் பிரவேசித்ததால் கட்சிக்குள் இருந்த செல்வாக்குகள் சரிந்துவிட்டன. நீயா, நானா போட்டியில் செ. இராசதுரையே தொடர்ந்தும் ஜெயித்து வருவார். கல்குடா மக்களை காணும் போதெல்லாம் கடும் சினம் ஏற்படும். ஆதரவாளர்களைக் கண்டாலும் ஆத்திரங்கள் பீறிட்டுப் பாயும். நாடி வருபவர்கள் மீது 'நாய்ப்பாய்ச்சல்' வேண்டாம்.

தொடர்ந்தும் பணவருவாய்க்குரிய இலாபகரமான ஆண்டாகவே இருக்கும். இவ்வதிர்ஷ்டம் தொடர்ந்திருக்க தினமும் ஜெபம் பண்ணி வருக.

# அரி பதில்கள்

எஸ். கௌரி
அளவையூர்

கே: அரி அண்ணு, த. வி. கூட்டணியுடன் மோதும் ஜீ.ஜீ. பொன்னம்பலம் பற்றி சில வரிகள்?

ப: சில வேளைகளில் மட்டும் புத்திசாலித்தனமாக நடந்து கொள்ளக் கூடியவர். ஆனல் அரசியல் குளத்தில் நீந்தத் தெரியாமல் அமிழ்ந்து கொண்டல்லவா போகிறுர்.

கே: பெற்றவர்களைச்சாட்டி சீதனம் வாங்கும் ஆடவர்களைப் பற்றிய பதிலை அண்ணுவிடமிருந்து எதிர்பார்க்கிறேன்.

ப: இவர்கள் பற்றி பல தடவைகள் கூறி விட்டேனே. வேறு ஏதும் ஆக்கபூர்வமான கேள்விகள் தோன்றவில்லையா?

கே: வேறு வேறு ஊரினில் வாழ்ந்துகொண்டு இரு பெண்களை விரும்பி மனைவியாக்குபவர்களைப்பற்றி என்ன கூறலாம்? இந்தக் கதிக்குள்ளாகும் பெண்களின் நிலைபற்றி யாது செய்யலாம்?

ப: நவீன யுக கிருஷ்ண பரமாத்மாக்கள்! இவர்கள் கண் வலையில் சிக்கும் பெண்கள் பரிதாபத்துக்குரிய ராதைகளே!

வவுனிநகர்
கலைராஜன்

கே: அன்றைய தமிழ் மன்னன் முல்லைக் கொடிக்காக தன் தேரையே ஈந்தான் இன்று அந்த மன்னன் இருந்தால்...?

ப: தமிழீழத்துக்காக தன் உயிரையே கொடுப்பான்.

கே: அரி அண்ணு நான் திருமணம் செய்யும் பெண் கலையார்வம் மிகுந்தவளாக இருக்க வேண்டுமென விரும்புகிறேன். அப்படி ஒரு பெண்ணை தங்களால் தேடித்தரமுடியுமா...?

ப: எந்தக் கலையில் ஆர்வம் மிகுந்தவளாக இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்? முதலில் இதைச் சொல்லுங்கள்.

சு. நாகராஜா,
வீட்டுத்திட்டம்.
புளியங்குளம்.

கே: அன்பு இல்லாத குடும்ப வாழ்க்கை ஜனநாயகம் இல்லாத அரசாங்கம் இரண்டிற்குமுள்ள வித்தியாசம்...?

ப: நரகத்துக்கும் - மகா நரகத்துக்குமுள்ள வித்தியாசமே.

கே: அரி அண்ணு தங்களை நான் விஷேசமான கலைநிகழ்ச்சிகளுக்கு அழைத்தால் வருவீர்களோ...?

ப: ஆம்!— ஸ்ரீலங்கா ஒளிபரப்பு சாதனங்கள் கூட்டுத்தாபனத்தின் சாகசங்கள் நடக்காத சந்தர்ப்பங்களில் மட்டும் அழைத்தால் வருவேன்.

ச. நித்தியானந்தம்
கனகராயன்குளம்
மாங்குளம்

கே: வடபகுதித் தமிழ் பேசும் மக்களின் தீர்ப்புக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவணங்குமா?

ப: தலை வணங்கித்தான் ஆகவேண்டும் என்ற கட்டாய நிலை ஏற்பட்டிருக்கிறதே!

கே: காதல் என்பது எது வரை?

ப: கட்டையில் போகும் வரை.

## உயிர் பிரியும் வேளையில் உதிர்த்த வார்த்தைகள்!

"ஹரேராம்" — மகாத்மாகாந்தி.

"விளக்கை அணைத்து விட்டுப்போ" - காமராஜர்.

(தம்மைக் குத்திய புருட்சைப் பார்த்து) "நீ கூடவா புருட்டஸ்" — ஜூலியஸ்சீசர்.

"கிரிடோ, ஈஸ்குலாபியசுக்கு நான் ஒரு சேவல் கடன் பட்டு இருக்கிறேன் அதைத் தீர்த்து விடு" - சாக்கிரடீஸ்

"ஏ, சுதந்திரமே! உன்பெயரால் எத்தனை மாபாதகங்கள் நிகழ்கின்றன" — மாடம் ரோலண்ட்

"திரையை விடுங்கள் கூத்து முடிந்தது" — ரபீலே

(தூக்கு மேடையில்) "என் தலையை ஞாபகமாக மக்களிடம் காட்டு. அவர்கள் இதைப்போல இனி எங்கே காணப்போகிறுர்கள்" — டான்டன்

தகவல் — மா. சிவலிங்கம்,
காரைநகர்

கே: இன்றைய தமிழ் இளைஞர்கள் இலக்கியத்திலா அரசியலிலா தங்கள் கவனத்தை செலுத்தவேண்டும்?

ப: தற்போதைய நிலையில் தம் உயிரைப் பாதுகாப்பதில் தான் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

செல்வி. குமுதி நடேசபிள்ளை
கலைமகள் வீதி
கலவியங்காடு

கே: அன்பான அரி அண்ணா! நடைபெற்ற கலவரத்தில் தமிழர்கள் மட்டும் திருமலையில் அழிந்து போகிறார்களே! காரணம் என்ன?

ப: திருகோணமலைத் தமிழ் மக்கள் தமது பிரதேசத்திலேயே பயந்துவாழவேண்டிய பரிதாப நிலை ஏற்பட்டிருப்பதற்கு காரணம் காடையர் பட்டாளத்துக்கு காவலாக அரச பட்டாளங்கள் இருப்பதே. திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழர்களுக்கு என்ன நடக்கும் என்பதற்கு இதுவே பெரிய உதாரணமாகும். பாம்பு என்று தெரிந்த பின்பும் பாலை வார்த்து வளர்த்த நம் தலைவர்களை எண்ணித்தான் வருந்துகிறேன்.

செல்வி கலைமாமணி,
காரைநகர்.

கே: அரசியல் கருத்து வேறுபாட்டினால் உறவுக்குள் பகையை வளர்த்துக் கொள்பவர்களுக்கு அரிஅண்ணாவின் அட்வைஸ் என்ன?

ப: ஒரே இடத்தை சென்றடைய நினைப்பவர்கள், பல பாதைகளை நாடுவதை விட ஒரே பாதையில் ஒற்றுமையாக கைகோர்த்து வீறுநடை போடுவதே நலம்.

கே: 1 நம்விடுதலை வீரர்களுடன், தமிழ்த் தலைவர்களும் ஆயுதமேந்தி போராடி தமிழீழத்தை பெறுவதாக கனவு கண்[illegible]ன். கனவு பலிக்குமா?

## 'பாம்பு இல்லாத நாடு'

இங்கிலாந்துக்கு அருகேயுள்ள அயர்லாந்தில் மருந்துக்குக் கூட ஒரு பாம்பு இல்லையாம், நாட்டில் எந்த மூலையிலும், நடந்த 1500 ஆண்டுகளாக ஒருபாம்பைக் கூட எவரும் பார்த்ததில்லையாம், இதற்குக் காரணம் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த செயின்ட் பேட்ரிக் என்பவர் அந்நாட்டில் உள்ள எல்லாப் பாம்புகளையும் அழைத்துச் சென்று கடலில் இறக்கிவிட்டார் என்று ஐரிஸ் மக்கள் நம்புகிறார்கள், இது ஐதிகம்

ஆனால் விஞ்ஞான ரீதியாக சொல்லும் காரணம்: ஏழு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்பட்ட ஐஸ் யுகம் வெப்ப நிலைக்கு முற்றிலும் மாறுபட்டு எல்லா பாம்புகளும் அழிந்திருக்க வேண்டும் என்கிறார்கள்?

— தமிழ்நாதன், செட்டிகுளம்.

ப: தலைவர்களும் ஆயுதமேந்தி...? சும்மா டுப் விடாதீர்கள். நீங்கள் கண்டது பகற்கனவுதானே!

கே: வெளிநாட்டிற்கு அனுப்புகிறேனென்று கள்ள ஏஜென்சிமார் அப்பாவிகளின் பணத்தை அபகரித்ததுமல்லாமல் நடுத்தெருவில் விட்டுச் செல்கிறார்களே. இவர்களின் கொட்டம் எப்போது அடங்கும்?

ப: வெளிநாட்டு பணமோகம் நம் இளைஞர்களை விட்டு நீங்கும் போது.

சி. சிங்கராசா
992 பாலையூற்று
திருகோணமலை

கே: அன்பின் அரி அண்ணா இலங்கையில் உள்ள தமிழ் பெண்கள் பலர் முஸ்லீம் பெண்களைப் போல் வேசம் பூண்டு வெளிநாடு போகின்றார்கள். இவர்கள் அங்கு போய் எப்படித் தொழுவார்கள், பாஸ் போர்ட்டைப் பார்த்தாலும் கண்டுபிடிக்கமுடியாத அளவில் பெயரும் மாற்றி இருக்கிறார்கள் இவர்கள் இலங்கைக்குத் திரும்பி வந்தால் கோயில்களுக்குச் செல்வார்களா? இதைப் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: தொழுகை நடத்துதல் சலாம் சொல்லும் முறை போன்றவற்றில் பயிற்சி கொடுத்து 'ஒரு தற்காலிக மதமாற்றம்' நடத்தியே பெண்கள்பலர் அனுப்பப்படுவதாக கேள்விப் படுகிறேன். பந்த பாசங்களை மறந்து பணத்தில் மட்டுமே பற்று வைத்து பறக்கும் இந்த பண விரதைகளால் நமது தமிழ்க் கலாசாரமே பாதிக்கப் படுகிறது. இதைத் தவிர வேறு என்ன கருத்தை நான் சொல்வது?


என். மகாலிங்கசிவம்
கொச்சிக்கடை
கொழும்பு-13

கே: என் கனவில் அடிக்கடி கடவுள் தோன்றுகிறாரே. காரணம் என்ன?

ப: நீங்கள் கொடுத்து வைத்தவர். என் கனவில் ஜெயவர்த்தனேஸ் வரரும் அவரின் பரிவாரங்களுமல்லவா வந்து தொலைக்கிறார்கள்.

கே: திரு. அமிர்தலிங்கம் அவர்கள் சிந்திக்காமல் பேசுவது போலல்லவா தோன்றுகிறது.

ப: அவர் அதிகமாக சிந்தித்தால் படுவேகமாகப்பேசுவார், அதனால்தான் அப்படி.



# அலறிய இதயம் ஒன்றின் முடிவுகள்

○ செல்வி மங்கை கங்காதரம் ○

உலகமே உறங்கிக்கொண்டிருக்கும் அந்த மயான ஓரத்தில் உறக்கமே வராது புரண்டு பின் எழுந்து வெறிச்சோடிக் கிடக்கும் வீதியை பார்வையால் வலம் வருகின்றபோது உண்டாகும் மன அமைதி.... மனிதஜென்மத்தையே காணச் சகிக்காது வெற்றிடமான மணற்பரப்பில் அமர்ந்து நிர்மலமான நீலவானத்தைப் பார்த்து நம்பிக்கைகளை அசைபோடும்போது உண்டாகும் இதமான நிலை..., தொழிலகத்தில் உள்ள அனைவரையும் அனுப்பிவிட்டு பளிச்சென்று எரியும் மின்விளக்கையும் அணைத்துவிட்டு இருண்ட சூழலில் கண்களைத்திறந்து இருளை விரும்பி சலனமற்றிருக்கையில் கிடைக்கக்கூடிய நிம்மதி... இத்தனையும் ஒருங்கே அமைந்தால் மனம் எத்துணை இன்பம் பெறுமோ அந்த இன்பம் நிம்மதி அயல் நாட்டுச்சகோதரியின் அந்த கடிதத்தில் கிடைத்தது இளங்கோவிற்கு. ஆனால் அவனின் மனதிற்கு ஆறுதலையும் அமைதியையும்தந்த அந்தக்கடிதம் அவனுக்குச் சாதகமான முடிவுகளைத்தந்திருக்கவில்லை. அவனால் காணமுடியாத முடிவுகளுக்காக அயல் நாட்டுச் சகோதரியின் துணையைநாடியிருந்தான். அந்தச் சகோதரியின் மடலும் அவனுக்கு கைவிரித்து விட்டது. அவனுக்கு அவனே பெரிய கேள்விக்குறியாக......

இளங்கோ 'பீ. ஏ' பட்டப்படிப்புப் படிக்கும்போது அவனின் செய்கைகளால் பாதிவழியில் படிப்பு பாழானது. அவன் ஒரு சிறந்த நாடகக்கலைஞனும் கூட. இளங்கோ எழுதித் தயாரித்த நாடகம் என்றால் பல்கலைக்கழக மாணவர்களிடையே அது விமர்சனமாகி அல்லோலகல்லோலப்படும். அத்தனைதூரம் அவர்களிடையே தனக்கென்று ஒரு நிலையைப் பிடித்திருந்தான். அவனுடைய ஒவ்வொரு நாடகங்களிலும் இனம், மதம், மொழி, நாட்டுப்பற்று இவற்றையே சூழ்ந்து நிற்கும் அரிய வாசகங்களால் நாடகத்தை ஜோடித்திருப்பான். அரசியல் வாதிகளைத் குத்திக்கிழித்து கூறு போட்டுக் காட்டுவதிலும் அவன் வல்லவன். இளங்கோவின் இந்த அட்டகாசங்களிடை அவன் அகத்தினையும் கவர்ந்தாள் ஒரு அகல்யா. அவள் ஒரு கவிதைப் பைத்தியம். அவளின் கவிதைகளை மட்டுமல்ல அவளின் இயல்புகளை செய்கைகளைப் படித்து ரசித்தான். கண்டதற்கெல்லாம் "ஹாய்" போடும் பல்கலைக்க

ழுக் மாணவிகளிடையே அடக்கமானவளாய் அமைதியானளாய் வலம்வந்தாள்.

ஓர் பொழுது அவள் கவிதைகளைப் படித்து தன் முன் வந்து மனந்திறந்து பாராட்டிய இளங்கோவை நிமிர்ந்து பார்க்கவே கூச்சப்பட்டவளாய் தலைகவிழ நன்றி சொல்லி அவன் திரும்பி போகும் போது நீண்டநேரமாய் அவனையே பார்த்தபடி நின்று தன்னகத்தில் அவனுருவைப் பொறித்துக் கொண்டவள் அந்த அகல்யா. வார்த்தைகளற்று பார்வைகளின் பரிமாற்றும் இரு உள்ளங்களில் காதல் மலர் பூத்து...... ஊமைக்காதலர்களாய் இருக்கவேண்டும். அவனுக்கு அவள் படிப்பு முடிந்துபோய் கல்யாணம் என்ற அழைப்பே இளங்கோவைத் தேடிவந்தது. அவன் கண்களில் கண்ணீர் பூத்தது காதல் கருகியதா? இல்லை. அவன் உள்ளம் கருகியதா? தன்னுடைய வாழ்க்கையை எழுதக்கிடைத்த அந்த சித்திரம் கை நழுவிப்போன போது அவன் தன்னுள்ளேயே உடைந்துபோனான். அதனிடையே தமிழீழப்பற்றுக் கொண்ட அவன் சில துண்டுப் பிரசுரங்கள் வழங்கிய குற்றத்திற்காக பிடிபட்டு சிறை சென்றான். அதிலிருந்து அவன் படிப்பு பாழானது. சிறையிலிருந்து மீண்டவனுக்கு தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற ஆசையே அற்றவனாய் நண்பர்கள் வார்த்தைகளையும் சட்டைசெய்யாமல் திரிந்தான். சில காலம் தாடி வளர்த்த சோகக்கவிதை இயற்றும் கவிஞனாய் வாழ்ந்தான்.

அவனின் சிறந்த சிந்தனா சக்தி, தீரமிக்க ஆக்கமுயற்சிகள் அந்நேரமும் அவனுள் தூங்கிக் கிடந்தன. எல்லாமே வெறுமையாகிப் போய்விட்ட மனநிலை படைத்தவனாய் கண்களில் ஒருவித ஏக்கம்படர விரக்தியுற்றவனாய் ..... இடியும் மின்னலும் கூடிய பெரும் புயல் மழை அவன் உள்ளத்தினுள் சூரசங்காரமாய் பொழிந்து அமைதியைப்பறித்தது.

குடும்பத்தில் அவன் இரண்டாவது பிள்ளை. அவன் பட்டப் படிப்பிற்கு செல்லும் முன் அவன் தந்தை இயற்கையெய்தி விட்டார். அன்பான அம்மா, பாசத்திற்கு அண்ணன், தங்கை தம்பி இவர்களே அவன்குடும்பத்தவர்கள். அண்ணன் அரச நிறுவன உத்தியோகஸ்தனாயிருந்தான்.

பல்கலைக்கழகத்தில் இளங்கோ நல்லபிள்ளையாய் இருக்கும்வரை அவன் குடும்பத்தவர் அவன்மீது அன்பாய் பாசமாய் இருந்தார்கள். இன்று பெற்ற வயிறு ஒன்றைத்தவிர மற்றவர்களின் வெறுப்பிற்கு ஆளானவனாகியிருந்தான்.

அவனின் மனப்புண்ணை ஆற்றும் மகத்தான மருந்தாய் அன்னையின் அன்பும், ஆறுதல் மொழியும் இருப்பினும் அதனிடையே கண்டிப்பும், கட்டளையும் இருந்தன. அதன் மேலாக அண்ணனின் கடுமைத்தனமும் கட்டளையும் அவனை எரிச்சலடைய வைத்தன. இருந்தும் ஒரு விடயத்திற்காய் ஒப்புக்கொண்டான்.

அவன் அண்ணன் விருப்பப்படி இருவரும் சேர்ந்து சிறு அளவில் முதல் போட்டு சொந்தமாய் சவர்க்கார தொழிலகம் ஒன்றை உருவாக்கினார்கள். ஆரம்பத்தில் தொழிலகத்தை கவனமாக கண்காணித்து முதலுக்கு நஷ்டம் ஏற்படாவண்ணம் பார்த்துக் கொண்டான். குடும்பத்தில் அமைதி நிலவியது. ஆனால் அவனளவில் அது என்று... எங்கு... கிடைக்குமோ என்றமாதிரி......?

ஒருவருடம் அவனால் அந்த தொழிலகத்தினுள் அடங்கி இருக்கமுடியவில்லை. தன்னால் மீண்டும் பிரச்சினை எழாதபடி நடந்து கொள்ளவே முற்பட்டான். ஆனால் அவனுள் வேரூன்றிப் போய்விட்ட இலட்சியங்கள் அவனை நிலைகொள்ளவிடவில்லை. ''நாடகத்துறையில் இறங்கி அதனை புதிப்பிக்கவேண்டும்... தமிழீழம் காண்பதில் முழுமூச்சாய் செயல்படவேண்டும் என்ற உணர்வு அவனைத்தட்டியது. இடையிடையே தமிழீழம் பெறும் கோரிக்கைகள், இனக்கலவரங்கள் அவனை அங்கு இழுத்துவிடும். அதனால் இவற்றிற்கும் தொழிலகத்திற்குமாய் அவனால் ஈடுகொடுக்க முடியவில்லை. தொழிலகத்தையும், தொழிலாளர்களையும் கவனிக்க நம்பகமான நண்பனெனக் கருதி பொறுப்பை தன் நண்பன் கையில் ஒப்படைத்துவிட்டு தன் இலட்சிங்களுக்காக செயல்படஇறங்கிவிட்டான்.

## உலகப் பூங்காவின் பொன்மலர்கள்

— சிவமணிமாணிக்கவாசகர் காரைநகர். —

பொருள்கள் எப்போதும் மாறுவதில்லை நாம் மாறுகிறோம். — டார்க்கி.

இன்பங்கள் சேர்ந்து வருவதில்லை. துன்பங்கள் தனித்து வருவதில்லை. — லிங்கன்.

நீ உன்னை அழித்துக் கொள்ள விரும்பினால் உன்னைவிட பணக்காரியை மணந்து கொள். — மைக்லேட்

அடக்கம், உண்மை, கற்பு இம்மூன்றும் பெண்களை பாதுகாக்கும் தேவதைகள். — ஹால்டன்.

அழகு என்பது உண்மை. உண்மை என்பது அழகு. — கிட்டிங்.

பெண்ணின் கற்பு கண்ணாடிப் பாத்திரம் போன்றது.

ஆணுக்கு உலகமெல்லாம் வீடு பெண்ணுக்கு வீடுதான் உலகம் — காண்டேகர்

அந்தோ! பரிதாபம்......

நண்பனின் கையாடல்கள். இயற்கையின் இன்னல்கள் எல்லாம் சேர்ந்து தொழிலகம் நஷ்டத்தில் மூழ்கியது. ஆறு மாதத்திற்கு பின்னுலேயே அது இளங்கோவிற்குத் தெரிந்தது. செய்வது தெரியாமல் சே என்று தலையைப் பிய்த்துக் கொண்டான். அப்படியிருக்கையில் மீண்டும் அவனை சிறை அழைத்தது. ஏனெனில் அவனும் அவன் கூட்டாளிகளும் அரசியல் வாதி ஒருவரின் உருவத்தை வைக்கோலினுல் செய்து யாழ் முற்றவெளியில் போட்டு பெற்றேல் ஊற்றிக் கொளுத்தி கோஷமிட்டதற்காக.

அவன் திரும்பி வந்த போது......

"வீட்டைப் பாதுகாக்காமல் நாடு என்ன வேண்டிக்கிடக்கிறது? எதைத்தான் பொறுப்பாய் ஏற்றுச் செய்திருக்கிறுய்' என்ற அண்ணனின் சீறலால் தலைகுனிந்து மௌனமாய் நிற்கத்தான் அவனுல் முடிந்தது.

"அண்ணன் ஒருத்தன் கஷ்டப்படுறுனே. வீட்டில பெண் பிள்ளை வேறு இருக்கிருள் எண்ட நினைப்பே இல்லாதவனுய் இப்பிடி உன்னுல எப்பிடியடா நடந்து கொள்ள முடியுது? சமூகத்தில சாதாரண மட்டத்து மனிசர்களைப் போல நானும் வாழ வேணும் எண்ட ஆசையில்லாதவனுய் நீ செய்யும் காரியங்கள்...... உன்ர எதிர்காலம் என்னுவது? இதையெல்லாம் பாத்து வருத்தப் படவேணும் எண்டு என்ர தலையெழுத்து. அந்த சிவன் புண்ணியஞ் செய்தது...... நான்..." கண்ணீருடன் தாயின் வார்த்தைகளைக் கேட்டு அவள் காலடியில் அமர்ந்து பதில் சொல்லத் தெரியாமல் அவனும் கண்ணீர் வடிப்பான். "ஏன் இப்படி ஆனேன்? "என்ற சிந்தனை இருந்ததேயொழிய அதற்கு பதில் காணவோ, தவிர்த்துக் கொள்ளவோ முடியாமல் அல்லலாடினுன்.

அவனை சுற்றி பிரச்சினைகள், எதிர்ப்புகள், தோல்விகள் சிக்குப்பட்ட வலை போன்று பின்னியிருந்தன.

"சரி! தொலைந்தது எல்லாம் தொலையட்டும். அரச நிறுவனம் ஒன்றில் வேலை வாங்கித்தாறேன். இனி அந்த இந்த சோலிகளில் தலையிடாமல் குடும்பத்தோடு இருக்கப் பார், அண்ணன் கூறியபோது பலமாக எதிர்த்தான் மனதுள். கல்யாணம் செய்து வைத்தால் மனைவி, குடும்பம் என்று சரியாகி விடுவான் என்று கண்மூடித்தனமாக அம்மா, அண்ணனுக்கு அறிவுரை கூற அதுவும் அவன் முன் வைக்கப்பட்டது.

ஒரே வீட்டில் இரு பெண்கள், ஒன்று அண்ணனுக்கு அடுத்தது அவனுக்கு, முன்னுல் அவனைக் கேட்காமலே எல்லாம் பேசப்பட்டிருந்தது, திடீரென்று அதை அவனிடம் கூறியபோது அதிர்ந்து பெரிதாய் சத்தம் போட்டான், "அதைப் பிடி.. என் இலட்சியங்களிடையே இதெல்லாம் சரிப்பட்டு வராது, வீடு, மனைவி, அலுவலகம் என்ற குறுகிய வட்டத்திற்குள் இருக்க ஒருக்காலும் என்னுல் முடியாது, நான் தனியனுய் இருந்து சுதந்திரமாய் செயல்படவிரும்புறன். என்னை வீணுய் வற்புறுத்தவேண்டாம்" பேசியவன்......'

இவர்கள் முன்னுல் பேசிப் பயனில்லை என எண்ணினுன் போலும் நேரே பெண் வீட்டிற்குச் சென்று தன் நிலையை எடுத்துச் சொல்லி தன்னை எதிர்பார்க்க வேண்டாம் எனக் கூறிவிட்டு வந்தான், விளைவு......

எல்லாவகையிலும் அண்ணனுக்கு பொருத்தமான, விருப்பமான அந்த பெண்ணும் இல்லை என்றுகியது,

கிணறுவெட்ட பூதம் புறப்பட்ட கதையாக அவனுக்கு பெரும் வேதனையையும் தலைவலியையும் தந்தது, அதனுல்...

அண்ணன் என்ற அந்த நீண்டகால உறவு அறுந்தது, வீட்டில் எரிமலைகள் நடமாடியது போல் அவர்கள் இருவர் நிலையும்......

முரண்பாடுகள்...... முரண்பாடுகள்

"ஒரு செருப்பு வாங்கினுல் இல்லை...... ஒரு சீலை வாங்கினுல் கூட பலமுறை பார்த்து பின்னே வாங்கிக் கொள்கிறுர்கள், ஆயிரங்காலத்துப் பயிர் என்று அளப்பவர்கள் எனது எண்ணத்தை ஆராயாமல் நடப்பதா? அழகும், அந்தஸ்துமா? அழுகாமல், அழியாமல் காலம்காலமாய் வாழும்? அன்பு அல்லவா? அன்பான உள்ளமல்லவா?

குழந்தையாய் இருக்கையில் கடைக்குச் சென்றபின் "எந்த இனிப்பு வேண்டும்?'' என்று கேட்டு வேண்டிக்

## தூற்றலும் மழையும்.

ஓயாமல் தூற்றல் போட்டுக் கொண்டிருந்தால் அது மழையாக மாட்டாது. சிணுங்கல் மழையினுல் கெடுதல் தான் உண்டாகும். தூற்றலாகத் தொடங்கியது மழையாக விரைவிலே பெய்து முடித்துவிட வேண்டும். ஒரு நல்ல காரியம் செய்யத் தொடங்குவோன், அதை ஒரே நீட்டாக வருஷக் கணக்கில் நீட்டி, மற்றவர்களுக்கு அதுவே ஒரு தீராத் தொல்லையாகும்படி செய்யலாகாது. "சுபஞ் சீக்கிரம்" நன்மையைத் துரிதப்படுத்த வேண்டும்.

— பாரதியார் —

எஸ். கே. ராஜரெத்தினம்,
ஸ்பிரிங்வெளி.

கொடுக்கும் இவர்கள்வளர்ந்த பின்பு ஏன் இப்படி வக்கிரமாக நடந்து கொள்கிறார்கள்? இப்படி இருந்தது அவன் மனப் போராட்டம்,

"இப்படி சிந்திப்பதால் தான், போராடுவதால்தான் முரண்பாடுகள் முளைக்கின்றனவோ? என்ன செய்வது முட்டாளாக இருக்கப்பழகவில்லையே? அண்ணன் விருப்பப்பட்ட அந்த பெண் என் செய்கையால் கிட்டாமல் போனதாம், எப்போதும் குத்திக் காட்ட ஒரு உதாரணம் அவர்களுக்கு, அவர்கள் ஆத்திரப்படுவதற்கும் அநாவசியமாய் வார்த்தையாடுவதற்கும் நானே கருப்பொருள், குடும்பமே என்னைக் குற்றவாளிக் கூட்டில் நிறுத்தி கூறுபோடுகிறது.

"இப்போதும் கெட்டுவிடவில்லை, பெண்ணின் தகப்பனிடம் மன்னிப்பு கேட்டுவிட்டு வா, அண்ணன் விரும்பிய பெண்ணும் கிடைக்கும், உனக்கும் மணம் முடித்துக் கொள்ளலாம் என்ற உறவினர்கள் கூச்சல் வேறு செவிப்பறையைக் கிழிக்கிறது, என்னுடைய இந்த அவதியான நிலையை என்னவென்று சொல்வது...? யாரிடம் சென்று புலம்புவது?'' தன்னுள்ளே புலம்பினான்,

தானத்தால் உயர்ந்தவன் தற்குறி அற்றதமிழன் ஞானத்தால் ஞாலம் வென்றவன் தமிழன். தான் ஒரு தமிழன் என்ற வகையில் தமிழுக்காய், தாய் நாட்டிற்காய் தன்னை அர்ப்பணம் செய்வது அவன் இலட்சியமாயிருக்கையில் அம்மா, அண்ணன், உறவினர்கள் சொல்லுக்கு இணங்குவானா?

"பண்டைய காலத் தமிழ் போர்வீரர்களின் வீரமிக்க செயல்களை. ஆவேஷமிக்க பேச்சுக்களை, வீரகர்ஜனைகளை கண்டு கேட்டநாடு. அன்று அப்படி வீரகர்ஜனையும் வீர உலாவும் செய்தவர்கள் இடைவெளியில் வீழ்ந்து போனார்கள். வீழ்ந்து போனவர்களை சூழ்ந்து கொண்டு ஒப்பாரி வைக்காமல் வேகமாய் செயல்பட்டு நமக்கொரு நாட்டை நாம் உருவாக்க வேண்டாமா?'' என்ற எண்ணங்கள் அவனுள்ளே வேரூன்றி வளர்ந்து விட்ட ஒன்று.

இந்நிலையில் இல்லச் சிந்தனைக்கு இடமெங்கே? அவனைப் போன்ற சிந்தனை பலருக்கு இருந்தால் வீட்டுப்பேச்சிற்கும் சற்று செவிசாய்ப்பவனாய் இருந்திருப்பான். சிந்தனை பிறப்பதே சொற்பம். அதனுள் அழுத்தங்கள் நிறைந்து விட்டால் உறவுகள் அழிகிறது. வேண்டா வெறுப்பாய் வாழ்வைக் காட்டிலும் மடிந்து போவதே என்ற எண்ணம் கூட சில வேளைகளில் உதயமாகிவிடுகிறது. வெளி இலட்சியங்களில் ஆழ்ந்து போயிருந்தாலும் வீட்டுப் பொறுப்பை அவன் உணராதவனல்ல. அவனுள் வளர்ந்து விட்ட தீவிரத்தால் இலட்சியங்களை அவனால் அலட்சியப்படுத்த முடியவில்லை.

நல்ல சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றும் அவனைவிட்டு விலகி ஓடின. குறுகிய வட்டத்துள் குடியேற அவன் மனம் ஒப்பாத காரணந்தான்.

காலம் கனியும், கற்பனை விடியும் என்று காத்திருந்து பயனில்லாமல் அலைகள் ஓய்ந்த பின்னால் நீராடலாம் என்றோ கடல்நீர் வற்றியபின் கருவாடு தின்னலாம் என்று காத்திருந்குடல் கருகிச் செத்த கொக்கின் நிலையை போலவே அவனால் காத்திருக்க முடியுமோ என்னவோ?

என்னும் நம்பிக்கைகள் மேல் நடைபயில்கிறான் போலும். நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் தானே மனிதனை வாழவைக்கின்றன. இலட்சியமா? இல்லமா? முள்ளின்மேல் நடையா? முழுமையான நிம்மதியா? அவையுமில்லையென்று...... நடைப்பிண வாழ்வா? நாடு போற்றும் நடைமுறையா? இரண்டே பிரச்சினை. இது எங்கே? எப்போ? முடியப்போகிறது என்பது அவனுக்கே தெரியவில்லை.

(தொடர்ச்சி 29ம் பக்கம் பார்க்க)

## உயிர் பிரியும் வேளையில் உதிர்த்த வார்த்தைகள்!

"என் சகல சொத்துக்களும் இன்னும் சில நிமிடங்களுக்குத்தான்' — எலிசபெத்ராணி

"சொத்துக்களையெல்லாம் விட்டுப் போகிறேன் எனக்குத் தங்கத்தால் சமாதிஒன்று கட்டுங்கள் வேறென்ன செய்யப்போகிறீர்கள் — எடிசன்பிரபு

"வக்கீலுக்குச் சொல்லி அனுப்புங்கள் நேரமானால் நான் அவரை நீதிமன்றத்தில் சந்திக்கிறேன்'' — ரேசுஸ்கி

"மூன்று முத்தங்கள் பாக்கியிருக்கின்றன இன்னும் அவள் வரவில்லையா?'' — பைரன்.

"எல்லோரும் என்னுடன் துணைக்கு வருவீர்களே இப்போது யாரும் வரவில்லையா?'' — மாங்கேயன்

"ஒரு பெண்ணை நான் ஆடையில்லாமல் பார்க்க வேண்டும் அப்பொழுதுதான் ஓவியனாகச் சாவேன் முடியுமா?'' — லித்தோகிரேப்டஸ்

"இன்னும் எத்தனை நாடுகள் பாக்கி? — செங்கிஸ்கான்.

(வேலைக்காரியிடம்) "நான் கூப்பிடும் வரை கதவைத் திறக்காதே'' — மர்லின் மன்றோ.

தகவல்—மா. சிவராஜா,
காரைநகர்

# ஈழத்து நகைச்சுவை நாவல்கள்

— பொ. சண்முகநாதன் —

ஈழத்தில் வெளிவந்துள்ள நகைச்சுவை நாவல்களைப் பார்க்குமிடத்து இங்கு நகைச்சுவை எழுத்தாளர்களாக அறிமுகமானவர்களில் எவரும் நகைச்சுவை நாவல்களைப் படைப்பதில் தங்கள் கைவரிசையை இன்னும் காட்டவில்லை. அல்லது அவர்களுக்கு அந்தத் துறை இன்னும் அவ்வளவு தூரம் கைவரவில்லை என்கிற உண்மையினை ஒப்புக்கொண்டே ஆக வேண்டியுள்ளது.

இந்த வகையில் நாவலாசிரியர் வரிசையில் இன்று முன்னணியில் திகழும் செங்கை ஆழியான் அவர்களே ஈழத்தின் முதலாவது நகைச்சுவை நாவலைப் படைத்த பெருமையையும் மொத்தம் மூன்று நகைச்சுவை நாவல் நூலுருவில் வெளிக்கொணர்ந்த பெருமையையும் ஒருங்கே பெறுகிறார். அவரே நாலாவதாக இன்னொரு நகைச்சுவை நாவலையும் எழுதிவைத்திருப்பதாக அறிகிறேன். இதே வேளை செங்கை ஆழியானுக்கு நகைச்சுவைக் கட்டுரை எழுதும் ஆற்றல் இன்னமும் கைவரவில்லை என்பதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஈழத்தில் வெளிவந்த முதலாவது நகைச்சுவை நவீனமான செங்கை ஆழியானின் ஆச்சி பயணம் போகின்றாள் நூலையே முதவில் அறிமுகத்துக்கு எடுத்துக்கொள்வோம்.

யாழ்ப்பாணச் சூழலில், கிணற்றுத் தவளையாக வாழ்ந்த சின்னாச்சிக் கிழவி யாழ்ப்பாணத்துக்கு வெளியேயுள்ள உலகத்தைக் காணும்போது ஏற்படும் உணர்வுகளை இந்த நாவல் சித்திரிக்கிறது. செல்லாச்சி அவளின் மகன் சிவராசா அவனது முறைப் பெண்ணும் காதலியுமான செல்வி ஆகியோர் கதிர்காமம் பார்க்கப் போவது போலமைந்த இந்தப் பயண நாவலில் ஆச்சியின் ஒவ்வொரு செய்கையும் பேச்சுமே எமக்கு நகைச்சுவை விருந்தாக இருக்கின்றன. அத்துடன் சிவராசா செல்வி இருவரின் காதற் குறும்புகளுக்கும் குறைவில்லை மாதிரிக்குச் சில வருமாறு:-

* மெயில் வருவதைத் தெரிவிக்கும் மணி அடிக்கப்பட்டது. மணிச் சத்தம் கேட்டதும் "முருகா" எனக் கரங்குவித்த ஆச்சி "ஸ்டேசனிலே கோயிலும் இருக்குப் போல "என்றாள்.

* றெயில்வே கன்ரீன் வெயிற்றர் ஒருவன் அங்கு வந்து எட்டிப் பார்த்தான். "மாத்தயா பொன்ட மொனவத ஒன." என்கின்றான் அவன். "போண்டாவாமோ.. சூசியம் இருந்தால் தரச் சொல்லு" என்றாள் ஆச்சி.

* "அதுவும் முந்தித்தான் ஆச்சி. திசமாற கமத்திலையிருந்து கோயிலுக்குக் காட்டுக்குள்ளாலை நடந்து போகவேணும். இப்ப ரோட்டெல்லாம் போட்டு பஸ்களும் ஓடுது நேரே. போகலாம்." -இது சிவராசா.

"ஆற்றை கமத்திலை இருந்து எண்டணி?" என்று குறுக்கிட்டாள் ஆச்சி.

இவ்வாறு, நாவலின் முற்பகுதியில் பல நகைச்சுவைத் துணுக்குகளை அள்ளி வழங்கி வந்த ஆசிரியரால் பிற்பகுதியில் தொடர்ந்து வழங்க முடியாமற் போனதும் இங்கு மனங்கொள்ளத்தக்கது.

அடுத்து, எழுபது வயதாகியும் முற்றத்துப் பனையில் விட்டம் போட்டு காற்றாடி விடுகிற பழக்கமும் வெறியும் தீராத வண்ணார்பண்ணை கொக்கர் மாரிமுத்துவையும் அந்த நெடிதுயர்ந்த பனைமரம், காற்றுக்கு எங்கே தனது வீட்டின்மேல் விழுந்துவிடுமோ என்று பயப்படுகின்ற அவரின் மைத்துனர் வலம்பல் காசிநாதரையும் அவர்களிடையே வளர்ந்துவரும் பகைமை உணர்வையும் வைத்துப் புனையப்பெற்ற இந்த ஆசிரியரின் மற்றொரு நகைச்சுவை நவீனமே 'முற்றத்து ஒற்றைப் பனை.'

அதிலே "அப்பு ஊரெல்லாம் கொழுத்தாடு பிடிக்கிறார். அந்த ஆளைக் கட்டுப்படுத்தவே முடியவில்லை. வயது போன காலத்திலை எனக்கு ஏன் இந்தத் தலைவிதி? நீங்கள் எல்லாரும் ஒருக்கா வந்து சரிப்பண்ணிவிட்டுப் போகவும்" என்றொரு கடிதம் வருகிறது.

அவ்வாறு இந்த நாவலில் வரும் பொன்னாச்சிப் பிள்ளை மக்களுக்கு எழுதிய கடிதத்தை அவளின் கடைசி மகன் எப்படிப் புரிந்துகொண்டு பதில் எழுதினான் என்பதை மட்டும் நல்ல நகைச்சுவைக்கு ஒரு சான்றாக இங்கே தருகிறேன்.

"அப்பு எங்கே ஆடு பிடித்தவர்? கொழுத்த ஆடு என்று எழுதியுள்ளீர்கள். அதை ஏன் கட்டி அவிழ்க்க முடியாது இருக்கிறது? கஷ்டம் என்றால் கனகசபையைக் கூப்பிட்டுப் பார்க்கச் சொல்லலாமே. கொழும்பில் ஆட்டிறைச்சி கிடைப்பதில்லை. இன்னும் பத்துப் பதினைந்து நாளில் வந்து சரிப்பண்ணுவோம்." இதுதான் மகனின் பதில்.

இந்த நாவலையும் நகைச்சுவையாக ஆரம்பித்து நகர்த்திக்கொண்டு வந்த நூலாசிரியர், இறுதியில் அந்தப் பனை சாய்ந்ததும் முத்தர் அம்மானும் சரிவதாகவும், பொன்னு ஆச்சி ஒற்றைப் பனையாக நிற்பதாகவும் துன்பியலில் முடித்துள்ளார்.

'கொத்தியின் காதல்' என்பது செங்கை ஆழியானின் மூன்றாவது நகைச்சுவை நாவலாகும்.

சுடலைமாடன், எறிமாடன், எருமைப் பல்லன், ஊத்தைக் குடியன், பெரிய பல்லுப் பெத்தாச்சி, இப்படிப் பல பேய்களைப் பாத்திரங்களாக்கி, அவைகளுக்கிடையே கொத்தி என்ற ஒரு பெண் பேயின் காதல் வரலாற்றைச் சொல்லும் அதீத கற்பனை வகையைச் சேர்ந்த நகைச்சுவை நாவல் இது.

பேய்களின் கதையில் அப்படிப் பெரிய நகைச்சுவை எதுவும் இல்லாவிட்டாலும், தர்மாகஸ்த்திரி, சங்கக் கடை அங்கெல்லாம் நடைபெறும் சமூக விரோதச் செயல்கள், மனிதக் காதல் போன்றவைகளை பேய்களைக் கொண்டே எள்ளிநகையாடச் செய்திருப்பது உயர்ந்த நகைச்சுவை எனலாம்.

இந்நாவலில் ஒரு கட்டம் இது:-
"மனிதக் காதல் இப்படித்தான். கலியாணம் என்றதும் காதலனுக்குப் பேச்சு வராது.."
இப்படிச் சொல்வது எருமைப்பல்லன்.
"ஏன்?" என்பது சுடலைமாடனின் கேள்வி.
"ஏதோ வகுக்கோப்பு எண்டு காட்டுகிறான்களாம்... அதுகளைப் பார்த்துவிட்டு இந்தப் பொடியன்கள் காதல் பண்ணுதுகள்... பதினாறு வயதிலே இந்தக் காலைப் பொடியங்களுக்குப் பொம்பிளை தேவை... வகுக்கோப்பு பார்க்கிறதுக்கே தேப்பன்ரை காசு தான் தேவை. அப்படியிருக்கக் கலியாணம் செய்து குடும்பம் நடத்த வக்கேது?"

அதே நாவலின் இன்னொரு இடம் இது:- சனத்துக்கு அரிசியையும் சீனியையும் ஒரளவு கொடுத்துவிட்டு, மற்றதெல்லாத்தையும் ஒருமாதிரி வெளியிலை விக்கிற சங்கக்கடை மனேச்சர்கள் சோட்டேச்சு வந்தால் என்ன செய்கிறார்கள் என்பதை கருங்குழி சுடலைமாடனுக்குச் சொல்லும் இடம்தான் அது— "சங்கக்கடை ஓட்டைப் பிரிச்சிட்டுக் களவு போனதுபோல ஒரு நாடகத்தை ஆடிவிட வேண்டியதுதான்... இப்ப இந்தச் சங்கக்கடை மனேச்சர்மார் எல்லாம் அதைத்தானே செய்யினம்.."

முடிவாகத் தொகுத்துப் பார்க்கும்போது சாவியின் 'வாஷிங்டனில் திருமணத்தையோ' பாக்கியம் ராமசாமியின் நாவல்களையோ எடுத்துக் கொண்டால் நாவலுக்கென எடுத்துக்கொண்ட கரு மட்டுமன்றி அதனைச் சொல்லும் முறையிலும் நடையிலும்கூட நகைச்சுவையைக் காணலாம். அதுவும் ஆரம்பம் முதல் முடிவுவரை.

அப்படியான நகைச்சுவை நாவல் எதுவும் ஈழத்தில் வெளிவரவில்லை எனினும். இந்தச் சிரமமான படைப்பிலக்கியத் துறைக்கு முன்னோடியாக செங்கை ஆழியான் ஆற்றிய பணி மகத்தானதும் பாராட்டத் தக்கதுமாகும்.

## கடல் கொண்ட காங்கேசன்துறை

தந்தை செல்வா அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்திய தொகுதி காங்கேசன் துறை; இன்று இங்குள்ள சிமந்து தொழிற்சாலைக்காக மண் எடுப்பதற்காகத் தோண்டப்பட்ட நிலம் பெரும் அகழிகளாகக் காணப்படுகின்றன. ஒரு கடல் கொந்தளிப்பு ஏற்படுமாயின் காங்கேசன்துறைத் தொகுதியின் அரைவாசிப்பகுதி கடலில் மூழ்கிவிடும்ஆபத்தும் காணப்படுகின்றது.

இலக்கியத்திலே நாம்கடல் கொண்ட கபாடபுரம் பற்றி படித்திருக்கிறோம். அந்தத் தமிழ் நிலம் கடலினுள் அமிழ்ந்து போனதே என்று கவலைப்படுகிறோம், ஆனால் சரித்திரத்தில் நாளை "கடல் கொண்டகாங்கேசன்துறை" என எழுதப் படாமல் இருக்க நாம் என்னசெய்தோம்' நமது தமிழ் மண் கடலில் அமிழ்ந்து கொண்டிருக்கும் அபாயத்தை கண்டும் காணாதவர்கள் போல் இருக்கிறோம்.

தந்தை செல்வாவைப் பிரதிநிதியாகக் கொண்டமையால் காங்கேசன் துறை மண் புனிதம்பெற்றது. அந்த மண் கடலில் அமிழ்ந்து போகாமல் பேண நாம் என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதை தந்தை செல்வாவின் நினைவு நாளில் பிரதிக்ஞையாக ஏற்றுக்கொண்டு ஆராய்வோமாக.

பொன். பூலோகசிங்கம்
(யாழ்ப்பாணத்தில் நடந்த தந்தை செல்வா நினைவுதினம் கூட்டத்தில் பேசியது

# கைலாசபதியும் இலக்கியமும்

— ஆம்பலூர்கவி அருணகிரிதாசர் —

பேராசிரியர் கலாநிதி க. கைலாசபதி அமரராகி பல திங்கள்கள் ஓடி விட்டன. அவர் மறைவு குறித்து நாடளாவிய முறையில் அனுதாபக் கூட்டங்களும், அறிக்கைகளும் இடம் பெற்றுப் பத்திரிகைகளை நிறைத்து விட்டு ஒரு தேக்க நிலையை நோக்கிச் சென்று கொண்டுள்ளன, கைலாசபதி பேராதனை பல்கலைக்கழக மாணவனாக, 'தினகரன்' பத்திரிகை ஆசிரியராக, பேராதனை கொழும்பு பல்கலைக் கழகப் பேராசிரியராக, யாழ் பல்கலைக்கழக வளாக முதற்றலைவராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதியாகத் தமது நாற்பத்தொன்பது வயதெல்லைக்குள் எவரும் மறுக்க மறைக்க முடியாத அளவுக்குப் பணி புரிந்துள்ளமை அவரது திறமையைச் சுட்டி நிற்கின்றது. இந்தக்கால எல்லையுள் அவர் அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, மலேசியா, சிங்கப்பூர், இந்தியா முதலான பல நாடுகளுக்குக் கல்வியின் காரணமாகவும், ஆராய்ச்சி நோக்கோடும் சுற்றுலாவாகவும் சென்று வந்தமையும் அனைவரும் அறிந்ததே! அவரது திறமை பல்கலைக்கழகப் பேராசிரியர், பத்திரிகை ஆசிரியர், இலக்கிய விமர்சகர், திறனாய்வாளர் என்ற வகையில் தமிழறிந்தார் எவரிடத்தும், தமிழைப் பற்றியறிய ஆசைப்படுவோரிடத்தும் உயரிய இடத்தினைப் பெற்றிருந்தமையையும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அந்த அளவுக்கும் மேலாக கைலாசபதி தமது போதனையிலும் எழுத்திலும் மார்க்சீய வாதியாக மிளிர்ந்ததையும் ஒளித்துவிட முடியாது.

மார்க்சிய இலக்கிய விமர்சனமாகட்டும், அரசியலாகட்டும் எதுவாயினும் தனிமனித வீரப் பிரதாபங்களுக்கு அறவே இடமில்லை என்பதில் கைலாசபதி அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தவர். இலக்கியத்தைத் தவிர நடைமுறை அரசியலில் தம்மால் ஒரு மார்க்சீய வாதியாக வாழமுடியாது என்பதனையும் பெருந்தன்மையுடன் ஒத்துக்கொண்டவர் கைலாசபதி. அவர் எவ்விதமான பிரக்ஞைபூர்வமான மார்க்சீய அரசியல் போராட்டம் எதனையும் அறியாதவர் மட்டுமல்ல, அவற்றோடு எவ்வித சம்பந்தமுமே வைத்திருந்தவருமல்லர். இவ்வாறு நான் கூறும்போது கைலாசபதியை மார்க்சீய அரசியலுடன் பிணைத்துப் பேசி எழுதி அதன் மூலம் இலாபம் பெற்றவர்களுக்கு ஒருவகை 'குமைச்சல்' ஏற்படவே செய்யும்! அதற்காக உண்மையைப் புறக்கணித்து விடமுடியாது. மார்க்சிய அரசியல் நடைமுறையைத் தனிமைப் படுத்திவிட்டு, மார்க்சீய இலக்கிய விமர்சனத்தை மிக அழகாக வெளிக்குத் தெரியாத வண்ணம் கனகச்சிதமாகச் செய்து வந்தவர் கைலாசபதி. இதனால் கைலாசபதிக்கும் தமிழுக்கும் பெருமையே தவிர குறையேதும் இல்லை! இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் ஈழத்திலும், தமிழகத்திலும் மார்க்சீய இலக்கிய விமர்சனத்தை மிகத் திறமையாகத் தர்க்க ரீதியாகச் செய்தவர்கள் வரிசையில் கைலாசபதியே முன்னிடம் பெறுகிறார்! இதனை மட்டும் வைத்துக்கொண்டு கைலாசபதியின் மறைவுடன் 'தமிழிலக்கியமே போய்விட்டது. திறனாய்வே போய் விட்டது' என்று 'பிலாக்கணம்' வைப்பதில் ஒரு சதப் பயன் கூடத் தேறாது, கைலாசபதி முழுநேர இலக்கிய வாதியாகத்திகழ்ந்தார். அற்புதமான சிந்தனையாளர். எழுத்தாளர். விமர்சகர்! யாருமே மறுக்க முடியாது. மறுக்கவும் இல்லை. ஆனால் அவருடனேயே 'எல்லாம் போய் விட்டது' என்று அபத்தக் கூப்பாடு போடுதலைமட்டும் சகிக்கமுடியாதுள்ளது! அதிலும் கால வெள்ளத்தை எதிர்த்து நிற்க முடியாத, வக்கிரமான சிறுகதைகளை எழுதி விட்டு, அதனைக் கம்யூனிஸ்ட் அரசியற்றுணையுடன் பிரசுரஞ் செய்து விட்டு, அந்த அரசியற்சார்பிலேயே ஏதோ ஓரளவுக்குப் பிரபலமானவர்கள், முறையாகத் தமிழை எழுத முடியாதவர்கள், ஒரு கடிதத்தைத்தானும்எழுத்துப்பிழையின்றி எழுத வக்கற்றவர்கள் கைலாசபதிக்காகக் கூக்குரலிடுவதனைக் கண்டு அழுவதா சிரிப்பதா என்றே தெரியவில்லை, பாவம், கைலாசபதி இருந்த போதும் இவர்கள் அவருக்குக் காலை வாரினார்கள். மறைந்த போதும் விடாது காலை வாரவில்லை, ஆளையே 'அமுக்க'ப்பார்க்கிறார்கள்! கம்யூனிஸ அரசியலும் மார்க்சீய இலக்கியமும் எனக்கு மிகவும் பிடித்தமானவையே. ஆனால் கம்யூனிச அரசியலின் ஒரு காலகட்டத் தேவையாக அமைந்துவிட்ட 'வக்கிரமான கதைகள்' மட்டுமே மார்க்சீய இலக்கியம் மல்ல. விமர்சனமல்ல!

பழைய இல்க்கியப் பரிச்சயமற்றவர்கள் சமய இலக்கியங்களை அறியாதவர்க்ள், நாட்டின் தேசிய, இனப்பிரச்சினைகளைக் கண்டுங் காணமறுப்பவர்கள், வெறும் 'உயர்வுதாழ்வு

சண்டைகளால் மட்டும் சிரஞ்சீவிகளாகலாம் என்று நினைப்பவர்கள், முற்போக்கு எண்ணம் படைத்த நடுத்தர, வர்க்கப்புத்திஜீவிகளையே 'பூர்சுவா மனப்பான்மை கொண்டவர்கள் என்று நவீன சநாதனம் பேசும் சமர்த்தர்கள். உண்மையில்இவர்கள் எல்லோரும் கைலாசபதியின் எந்தத்திறமையைக் கண்டு புகழ்கிறார்கள்? இனியாவது இவர்களது அணிகளைச் சேர்ந்தவர்கள் கைலாசபதியிடம் தான் கண்ட இலக்கிய தனித்துவத்தை, சாமர்த்தியத்தை அனை[illegible] விளங்கக்கூடியதாக எழுதிக் காட்டுவார்களா? இந்தச் சில திங்களுக்குள்ளேயே அணிக்குள் அணிகளாக இவர்கள் பிரிந்து நின்று, அனுதாபக்கூட்டம், அஞ்சலிக்கூட்டம் நடத்தவே சண்டை போடுகிறார்கள்! கைலாசபதி அவர்களை மன்னிப்பாராக என்று பிரார்த்திக்க வேண்டும்.

இந்த நாட்டில் 'திறமை என்பது வேறு, விளம்பரம் என்பது வேறு' என்பதனை புரியாத பொதுமக்கள் நிறையப் பேரிருக்கிறார்கள்! திறமையுள்ளவர்களை அறுப்பதற்கன்றே இந்த விளம்பரங்காவிகள் ஒன்று கூடுவார்கள். பாரதியுஞ்சரி, கைலாசபதியுஞ்சரி இவர்களிடம் மாட்டிக் கொண்டால் விடுபடவே முடியாது. இவர்கள் நுழையாத இடமேயில்லை. வெகுசனப்பிரசார சாதனங்கள் அத்தனையையும் கைக்குள் வளைக்கும் கலை கைவந்த இவர்களால் 'துறைதேர்ந்த திறமைசாலிகள் இருட்டடிப்புச் செய்யப்படுவதும், வெறுஞ் சில்லறைகள் இலக்கியப்பிரம்மாக்கள் ஆக்கப்படுவதுஞ் சர்வ சாதாரணம்! எந்தத் தொழிலுமே செய்யாது, சமூகசேவை செய்து கொண்டே 'பெரும் பிரமுகர்களாக' உள்ள இவர்களிடம் 'பணம் சேர்க்கும்' கலையைப் படிக்க முயல்வது வெகு சுவாரஸ்யமாகலாம். இலக்கிய விமர்னத்துறையில் கைலாசபதி பல நூல்களை எழுதியுள்ளார், அவை எமது இளைய சந்ததிக்குப் பெரிதும் உதவலாம். ஆனால் 'தாமே இலக்கியப் பிரமாக்கள்' என்று கூத்தாடுபவர்களுக்கு இந்நாவல்கள் ஜீரணமாக மாட்டா. அதுபோலவே தொல்காப்பியரும், நன்னூலும், தமிழிலக்கண ஆய்வுகளும், கைலாசபதிக்குத் தெரியாதவை - முடியாதவை என்பதும் இவர்களுக்கு ஜீரணமாகா! சுவாமி விபுலாநந்தர், வித்துவ சிரோமணி. கணேசையர். குருகவி மகாலிங்கசிவம் புலவர் மணி சோ. இளமுருகனார் போன்றவர்களது முயற்சிகளையோ, ஆய்வுகளையோ கைலாசபதியால் அணுக முடியவில்லை என்பதையும் தெரிவிக்காமலிருக்கமுடியாது. நவீன உரைநடையில் தமிழிலக்கிய விமர்சனத்தில் உயர்ந்து விளங்கும் கைலாசபதிக்கு ஒப்பாக பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார் பேராசிரியர் முத்துசிவன், பேராசிரியர் வெள்ளைவாரணனார் போன்றோர் விளங்கினரென்பதனையும் சுட்டிக்காட்டவே வேண்டும். இவர்களிலும் பார்க்க கைலாசபதி மாறுபட்டு விளங்குவது மார்க்சிய நோக்கு ஒன்றினாலேயே. அஃது காலத்தின் தேவையாகும்! மார்க்சிய நோக்குமிகக்குறுகிய வக்கிரமான எல்லைகளைக் கடந்ததொன்றாகும் சமூக, சமய, சாதிக் கொடுமைகளைக் கடூரமாகச் சாடியெழும் மார்க்சிய இலக்கிய விமர்சனம் இவற்றுளொன்றுடன் மட்டும் 'ஆதியுமந்தமுமாகப்பிணைக்கப்பட்டதொன்றல்ல என்பதனை இலக்கிய ரசிகர்கள் முற்றுமுழுதாகத்தெரிந்து கொள்ளவேண்டும்,

பேராசிரியர் கைலாசபதி இவ்வுண்மையினைத்தமது நாற்பதுகளுக்குப்பின் நன்குணர்ந்து கொண்டிருந்தார். ஆரம்பகாலத்தில் குறிப்பிட்ட ஒரு வட்ட எழுத்தாளர்களுடன் மட்டுமே சகவாசம் வைத்துக்கொண்டிருந்த அவர் பின்னர் அனைத்து எழுத்தாளர்களுடனும் சகசமாகப் பழகவும், பேசவும், விமர்சிக்கவும், நூல்களுக்கு முன்னுரையெழுதவும் முன் வந்தமை இதனைத்தெளிவுபடுத்துகிறது, இனங்களின் பிரச்சினைகளை மறந்துவிட்டு 'அனைத்துலக அரசியலும், புரட்சியும் பேசிக்கொண்டிருந்தமையால் சொந்த இடங்களையே கோட்டை விட்ட இடது அரசியலையும் பிற்காலத்தில் கைலாசபதி நன்கு தெரிந்து கொண்டார். தமிழ் மக்களது போராட்டம் முதலாளித்துவப் போராட்டமல்ல, அது ஒரு தேசிய இனப்பிரச்சினை, தீர்த்துவைக்கப்படவேண்டியது என்பதனை மனதார விசுவாசிக்கவும் செய்தார். எனவே கைலாசபதி நம்பிய மார்க்சிய இலக்கிய நோக்கிலுஞ்சரி கைலாசபதி சமகாலத்தின் உன்னதமான ஒரு தமிழிலக்கிய விமர்சகர், எழுத்தாளர், திறனாய்வாளர் என்பதனைத் தவிர வேறு எதனையுங் கூறி அவரது பெருமைக்கு இழுக்குண்டாக்குவது அறிவுடைமையாகாது.

நீதிநெறியறியாதோர் சமாதான நீதிபதிகளாகவும், சாதாரண அறிவுமற்றவர்கள் பேரறிஞர்களாகவும் அழைக்கப்படுவது சமுதாயத்தின் மருண் நிலையாகும், உலகெங்கணும் இந்த மருண் நிலை எக்காலத்துமுளது. பேராசிரியர் கைலாசபதியின் ஆதரவினால் எழுத்துலகில் தலைகாட்டியவர்கள், அதற்கு நன்றிக்கடனாக விடயந் தெரியாமல் எல்லாம் எமக்குத் தெரியும் என்று பேசி எழுதிக்காட்டுவதனால் கைலாசபதிக்கு நன்மையில்லா விட்டாலும் அவரது மறைவுக்குப்பின், அவரது நல்ல இலக்கியப் பணிகளுக்கு மாசுண்டாக்காமலிருக்க வேண்டுமென்பதுதான் எனது பிரார்த்தனை!

நண்பர் கைலாசபதி 'தினகரன்' ஆசிரியராக இருக்கும் போது 'கலைச்செல்வி' இலக்கிய சஞ்சிகைக்கு ஒரு மதிப்புரை 'தினகரன்' ஞாயிறு இதழில் எழுதினார். 'காளிதரிசனம்!' என்ற தலைப்பில் 'கலைச்செல்வி'யில் வெளியான ஒரு கவிதையைக் குறிப்பிட்டு பாரதியின் 'மங்கியதோர் நிலவினிலே.......!' கவிதைக்கு இணையாக இக்கவிதை விவங்குகின்

றது என்று புகழ்ந்தார். 1980 ஆம் ஆண்டில் பிற்பகுதியிலே நான் எழுதிய மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஏன் பகிஷ்கரிக்க வேண்டும்?' என்ற நூலைப் படித்துப்பாராட்டிய அவர், பின்னர் தாம் வகிக்கும் பதவி காரணமாக அந்நூலின் அறிமுக விழாவிலே கலந்து கொண்டு பேச முடியாதிருக்கிறது என்று வருத்தம் தெரிவித்தார்! 1982 மார்ச் முதலாந்தேதி திருநெல்வேலியில் நடைபெற்ற பாரதி விழா உரையரங்கில் நான் பேச எழுந்த போது, தலைமைதாங்கிய அவர் மிக அற்புதமாக என்னைச் சபைக்கு அறிமுகப் படுத்தினார்! இந்த மூன்று நிகழ்ச்சிகளிலும் கைலாசபதியின் அப்பழுக்கற்ற மனத்தூய்மையை நான் தரிசித்தேன்! அதற்காக அவர் 'எல்லாம் வல்லவர், எங்கும் இருப்பவர், சர்வவல்லமை வாய்ந்தவர்' என்று நான் சாற்றப்போவதில்லை! கைலாசபதி தமிழிலக்கிய வரலாற்றில் மறக்கப்பட முடியாதவர் என்பது மாத்திரமே எனது கருத்து, விசுவாசமும், நன்றியறிதலும் அவற்றுக்குரிய முறையிலே தாம் காட்டப்பட வேண்டும். பிசகினால் பெருமைப்படுத்தப்பட வேண்டிய வரையே சிறுமைப்படுத்துவதாக அமைந்து விடும். மார்க்சீய இலக்கிய விமர்சனமும், கம்யூனிச அரசியல் சித்தாந்தமும் உலகளாவியது மட்டுமல்ல ஒரு சிலரால் மட்டுமே உரிமை கொண்டாடப்பட்டு சிறைப்படுத்தப்படக் கூடியனவுமல்ல. இதனைக் கைலாசபதிக்காக வெற்றுரவாரஞ் செய்பவர்கள் மனங் கொள்வது அவசியம், 'கஈமஞ் செப்பாது கண்டது மொழிமோ!' என்பது அமரவாக்கே. அமரர் கைலாசபதியின் நாமம் நீடுவாழ்க வென்றுவாழ்த்துவது பவித்திரமானது. பாவத்தனமான மேடைப்பேச்சுகளிலும், கட்டுரைகளிலும் பார்க்க மேலானது!

தமிழிலக்கியப் பெரும்பரப்பில் மாபெருங் கவிஞர்களும், விமர்சகர்களும் பலநூற்றுண்டுகளாக உள்ளனர். காலத்தைவென்றோர் சிலர் காலம் வென்றோர் பலர். முற்போக்கு இலக்கியம் என்பதும் மக்கள் இலக்கியம் என்பதும் இலக்கியத்தின் வெவ்வேறு திசைக் குறிப்பே. முற்போக்கமைப்பு ஒன்றிருப்பின் அதற்கப் பாலுள்ளோரனைவரும் பிற்போக்காளர் அல்லர். பெயருக்குள் இருப்போரனைவரும் முற்போக்காளருமல்லர். மக்கள் இலக்கியப் பெயருக்குள்ளமைபவர்கள் மாக்களுக்காக எழுத, ஏனையோர் மக்களுக்காக எழுதுவோரல்லர். இப்பெயர்கள் சந்தப்பட்டோரின் வேணவாவை வெளிப்படுத்துகின்றன என்றே கொள்ளப் பொருந்தும். பேராசிரியர் கைலாசபதிக்கு இவ்வுண்மைகள் நாற்பது வயதுக்குப் பின்னரே புலனாயின. 'தினகரனில்' ஆசிரியப்பதவி வகித்த காலை பல எழுத்தாளருக்குக் கைகொடுத்த கைலாசபதி, பல எழுத்தாளர்களை இருட்டடிப்புச் செய்தமையையும் மறைக்கமுடியாது. இச் பெருங் குறையன்று, மனிதமனத்தின் குறைநிறைவுகள் எந்தப் பெரிய மனிதரையும் பற்றிக் கொள்ளக் கூடியன தொடரக்கூடியன என்ற இயற்கை நியதியின் வெளிப்பாடே இது! புரட்சி இலக்கியம், மார்க்சீய இலக்கியத்தில் குறுகிய மனஉளைச்சல்களுக்கும் தாழ்வு மனப்பான்மைகளுக்கும் அருட்டுணர்வுகளுக்கும் இடமேயில்லை, இந்நாட்டில் முற்போக்கு இலக்கியவாதிகள் என்போரிற் பலர் பரிதாபத்துக்குரிய நிலையில் கடந்த கால் நூற்றுண்டுக்கு மேலாக ஒரேயிடத்தில் நின்று கொண்டு அரைத்தமாவையே அரைப்பவர்களாக இருப்பதனை நாடறியும். தேசிய ரீதியிலும், சர்வ தேசிய ரீதியிலும் உலகம் எவ்வளவு மாறிவிட்டிருக்கிறது! அதனை மறுதலித்துக் கொண்டு முற்போக்குப் பேசுவதில் பயனில்லை. பழந்தமிழிலக்கியங்களில் முற்போக்கான கருத்துக்கள் உளவென்பதனை ஒட்டுமொத்தமாக மறுதலிப்போரும், பாரதி மகாகவி என்று ஏதோ ஒருநாடு சொன்னால் மாத்திரம் மகாகவி என்பதும், இல்லாவிடில் பாரதி பிற்போக்குகவி என்று தூற்றுவதிலும் ஈடுபட்டவர்கள் கூட கைலாசபதியையும், கட்டிக்கொண்டழுவது எத்தனை விசித்திரமானது! சொந்த மொழியிலுள்ள பழமையான இலக்கியங்களையே அறியாதார் ரஷ்ய, சீன இலக்கியங்களைப் பற்றிப் பேசுவது என்ன வியப்பு? ரஷ்யாவும், சீனாவும் சிலப்பதிகாரத்தையும் இராமாயணத்தையும், திருக்குறளையும் போற்றிய பின்னரே சில முற்போக்காளர்களுக்கு இவை இலக்கியமாகத் தெரிகின்றன போலும்! கைலாசபதியதார்த்த பூர்வமான சமூக நோக்கோடு எமது நாட்டுச் சிறுகதை எழுத்தாளர்களை நெறிப்படுத்துவதில் மட்டுமே ஓரளவு வெற்றிகண்டுள்ளார்! இஃது ஒரு நூலாசிரியர், விமர்சகர், சிந்தனையாளர் என்ற அளவில் அவரது சொந்தமான படைப்புகள், நூல்கள், அவர் வகித்த பதவிகள் என்பவற்றுடன் ஒப்பிடும் போது மிகச் சிறிதான சாதனையாகவே கருதக்கிடக்கிறது. இதனிலும் பார்க்க தனிப்பட்ட கைலாசபதி இமயமாக எழுந்து நிற்கிறார் என்பது வெளிப்படை!

# கவிச்சரங்கள்

## இறைவா என்னையும் மினிஸ்டராக்கு!

—செ. குணரத்தினம்—

பொங்கிடும் கடல் விரித்து
    புடையனாய்க் கரையில்மோத!
குங்குமச் சரிகைச் சால்வை
    குடையுடன் தோணியேறி
கங்கையைக் கடந்துமெல்ல
    கரையேறிப் பஸ் பிடித்து
வங்கியில் ஈடுவைக்க
    வருகிறார் வைரமுத்தர்!

முந்தநாள் முகத்துவார
    முடங்கலில் மட்டிகல்ல
சுந்தரி பொன்னி செல்லம்
    சுப்பனின் மனைவி நல்லம்
சந்தன மச்சாளோடும்
    சென்றவள் குமுதா பூத்து
வந்தனள் அதனால் இன்று
    வருகிறார் வைரமுந்தர்!

கண்ணிலே கண்ட தண்ணீர்
    கனகம்மா மாமி வார்த்தாள்
என்றாலும் எட்டாம் நாளில்
    இரண்டொரு பேர்க்குச் சொல்லி
பெண்ணிவள் சி[illegible]ப்பைப் பார்க்க
    பெருமாசை கொண்ட தாயார்
கண்ணனை காசில்லாமல்
    காப்பொன்றைக் கழற்றிவைத்தாள்'

வட்டியும் குறைவு [illegible]கள்
    வங்கியில் அடவு வைக்க
இட்டிடி நம்பரொன்று
    கிடைத்தாலே அதிஷ்டமென்று

## அர்த்தம்

—மதி—

"ஆராரோ, ஆரிவரோ?
ஆரடித்து நீயழுதாய்......"
அன்னையின் தாலாட்டின்
அன்றைய அர்த்தம்
இன்று புரிகிறது
ஓ.........
அதை
என் பாட்டியும்
சொல்லியிருக்கிறாள் போலும்

● ●

## சிரிப்பு எப்போ?

—கே. யசோதா—

பருவத்தின் மாற்றத்தால்
பகட்டாயிருந்த வானமெல்லாம்
மாறு வேடமெடுத்து,
தடையின்றி பல நாட்கள்
சோவென மழைபொழிய,
கார் முகிலுக் குள்ளிருந்து,
சூரியன், எப்போ? வெளிவருவானென,
தடாகத்தில் தவித்தவண்ணம்
ஏங்கி நிற்கும் செந்தாமரைகள்,
சிரிப்பதற்கு, நாள்வராதோ!

● ●

## நுளம்பு

—தேசிகன்—

## [illegible]வெறி

—கிண்ணியா அமீரலி—

வீதியில் இருவர்
வீழ்ந்து கிடக்கிறார்'
ஒருவர்
குடி வெறியில்!
மற்றவர்
பசி வெறியில்

●

## அமைதி

— சென்னியூர் சுலோஜனா —

அமைதி என்ற
    மூன்றெழுத்து
அது தான் தேவை
    வாழ்வதற்கு
சுமையும் சோகச்
    சுமைகளையே
குறைக்கும் நல்ல
    ஒளிவிளக்கு

●

## விடுதலைப் பறவை கிறீச்சிடுகிறது..

ஆர். எம். நௌஸாத்

விடுதலைப் பறவை
    கிறீச்சிடுகிறது
ஆயுதமாலைகளை அணிவித்து
    எம்மை
ரணகளத்தில்
    நடக்க வைத்த போதும்
விடுதலைப் பறவை கிறீச்சிடுகிறது
    கொடுஞ்சிறை மாளிகையில்
சித்திரவதைக் குழந்தைகளை
    நாம்
    [illegible]வனைத்திருந்த போதும்
    விலங்கு பூட்டியே
காய்த்து... தளும்பேறிப் போன

வட்டியும் குறைவு [illegible]கள்
வங்கியில் அடவு வைக்க
கிட்டிடி நம்பரொன்று
கிடைத்தாலே அதிஷ்டமென்று
திட்டங்கள் தீட்டி 'முத்தர்'
தெய்வத்தை வேண்டிக்கொண்டு
எட்டினார் கையை அங்கே
இருபதாம் நம்பர்த் துண்டு!

பத்தரை மணிக்கு முன்னால்
பறக்கலாம் வீடு என்று
'முத்தரும்' எண்ணிக் கொண்டு
முடங்கினார் கதிரை யொன்றில்
பத்தரை பதினொன்றாகி
பகல்பொழுதங்கே ஓட
நித்திரை இமையைக் கௌவும்
நிலைகண்டு எழுந்து நின்றார்!

நம்பரை எடுத்த 'முத்தர்'
நம்பிக்கையோடிருக்க
நம்பர்கள் எதுவுமின்றி
நாலைந்து பத்து என்று
வந்தார்கள் பலபேர் ஆங்கே
வங்கியில் வேலைபார்க்கும்
நண்பரை அணுகி அன்னார்
நைசாக வெளியே போனார்!

செல்வாக்கு எதுவுமின்றிச்
செத்தவர்' போலே முத்தர்
பல்லெல்லாம் வெளியேகாட்டி
பதுங்கிட வங்கிக்காரர்
தள்ளிப்போ உனக்குநம்பர்
தந்தது போலே வாரும்
இல்லையேல் நாளை காலை
ஏளியாய் வாருமென்றார்!''

ஆத்திரம் கொண்டமுத்தர்
அநீதியை எதிர்த்துச்சொல்ல
வார்த்தைகள் எதுவுமின்றி
வங்கியில் கிடந்த அந்த
மூட்டையின் கதிரையுள்ளே
முடங்கினார் அவரின் நெஞ்சம்
கேட்டது 'இறைவா என்னை
கட்டாயம் மினிஸ்டராக்கு!.

## நுளம்பு

—தேசிகன்—

சங்கீதம் பாடி
தலைமாட்டில் ''டான்ஸ்ஆடி,
என்குருதி குடிக்கின்ற நுளம்பே!
உனை என்ன செய்தும்
வெல்ல வழி இல்லே
தமிழ் உன் குரலில்
ஒலிப்பதனால் புள்ளே!
எலும்பான என் உடல் குத்தி
மழுங்கிற்றே 'மூஞ்சி' என ஏசி
திரும்பாமல் போனவளே
தேடிவந்த தேனடி நீ
கரும்பா என் குருதி
கற்கண்டா?

## வோட்டுக்கள் ஏதுக்கடா?

—குமார் தனபால்—

நடக்கத் தெரியாத
நடைகெட்ட மனிதர்க்கு
குடை செருப்பேதுக்கடா, தம்பி
குடை செருப்பேதுக்கடா!?
கொண்டாடத் தெரியாத
குண்டாந்தடியனுக்கு
பெண்டாட்டி ஏதுக்கடா, தம்பி
பெண்டாட்டி ஏதுக்கடா?
கையிலோ காசில்லை
கடனுக்கோ வழியில்லை
பையிது ஏதுக்கடா, தம்பி
பையிது ஏதுக்கடா?
வீட்டுக்கோ கூரையில்லை
வேயவோ ஓலையில்லை
வோட்டுக்கள் ஏதுக்கடா, தம்பி
வோட்டுக்கள் ஏதுக்கடா?

சித்திரவதைக் குழந்தைகளை
நாம்
[illegible]வணைத்திருந்த போதும்
விலங்கு பூட்டியே
காய்த்து... தழும்பேறிப் போன
கரங்களில் வந்து நின்று
கிறீச்சிடுகிறது.
ஏமது வாய்களை
இறுக அடைத்துவிட்ட
போதிலும்
மனதுக்குள் வந்து நின்று
இந்த
விடுதலைப் பறவை கிறீச்சிடுகிறது.
நமக் கொரு
விடிவு வருமட்டும்
அது
கிறீச்சிட்டுக் கத்திக்கொண்டே
யிருக்கும்.

## என்ன சொல்ல?

—தமிழமுதன்—

அங்[illegible]த்து
அழகை கூட்டி
தங்கத் தமிழ்ப்
பண்பைப் பேண
அம்மா கட்டினாள்
சேலை

உடலழகு தன்னை
ஊருக்கே வெளிச்சமாக
உருவான ஆடைபலவும்
உடுத்துகிறாள்
என் துணைவி!

அப்பா நாங்கள்
இப்போ......
ஆடை, யேன்
உடுத்துகிறோமென்று
அடக்கமாய் கேட்கும்
மகற்கு....
அடியேன் என்ன சொல்ல?-

# பிரிந்திடவே வேண்டுமடா (4)

கொக்கூர்கிழான் தொடர் காவியம்

பலமொழிகள் பேசுபவர்
வாழ்கின்ற நாடுகளில்
பாரில் எங்கும்
மொழிவாரி மாகாணம்
அமைத்தன்றோ தீர்த்துவைத்தார்
மொழியின் சிக்கல்
இலங்கையிலும் அவ்வாறே
மொழிவாரி மாகாணம்
பிரித்த மைத்து
மொழிச்சிக்கல் தீர்த்திருந்தால்
இன்றுபல பிரச்சினைகள்
ஒழிந்தி ருக்கும்

அருகிலுள்ள இந்தியாவைப்
பாருங்கள் பாக்கிஸ்தான்
மதத்தின் பேரால்
பிரித்தபின்னர் எஞ்சியுள்ள
பாரதத்தை மொழிவாரி
யாக வன்றோ
பிரித்தமைத்தார் எத்தனையோ
பிரச்சினைகள் தீர்ந்ததங்கே
இசுலா மியரும்
இருக்கின்றார் இன்னுமங்கே
எல்லாரும் பாக்கிஸ்தான்
ஏக வில்லை.

இங்குள்ள முஸ்லிம்கள்
இரண்டுபட்டு நிற்கின்றார்
கிழக்கில் வடக்கில்
தங்கியுள்ளோர் தாய்மொழியாய்
தமிழினையே கொண்டுள்ளார்
சிங்க ளத்தை
எஞ்சியுள்ள பகுதிகளில்
வாழ்பவருட் பெரும்பாலோர்
ஏற்றுள் ளார்கள்
பின்பற்றும் மதமதனால்
பிரியவில்லை மொழியதனால்
பிரிந்துள் ளாரே

இந்தநிலை இங்குமட்டும்
உள்ளதன்றே உலகமெங்கும்
இருக்கும் ஒன்றே
மந்தபுத்தி உள்ளவர்கள்
தந்நலத்தைப் பெரிதாக
மதிப்ப வர்கள்
சொந்தநலன் கருதியன்றோ
பிரிவினையை எதிர்க்கின்றார்
முஸ்லிம் மக்கள்
மந்தைகளாய் வாழ்ந்தகாலம்
மலையேறி விட்டதின்று
மறந்தி டாதீர்

தங்களது தாய்மொழியாய்த்
தமிழ்மொழியைக் கொண்டங்கே
தமிழ ரோடு
தங்களது வாழ்வதனைப்
பிணைத்துள்ளார் எத்தனையோ
தலைமு றையாய்
தங்களது தலைவிதியை
தாங்களாக நிர்ணயிக்கும்
தகைமை உள்ளோர்
உங்களது பேச்சதனால்
இம்மியுமே உளம்மாறார்
உளாறு திருப்பீர்

வடகிழக்கில் வாழ்கின்ற
முஸ்லிம்கள் முத்தமிழும்
வல்லார் அன்னார்
படைத்தளிக்கும் இலக்கியங்கள்
பைந்தமிழில் அவர்க்கிருக்கும்
பாண்டித் தியத்தை
எடுத்துரைக்கும் எழுத்தறிவே
இல்லாத முஸ்லிம்கள்
இசைக்கும் கவியும்
தொடுமென்றால் உள்ளத்தை
அவர்களது தமிழாற்றல்
சொல்லுட் படுமோ

எங்கெங்கே வாழ்ந்தாலும்
இந்நாட்டு முஸ்லிம்கள்
எழுத்தில் பேச்சில்
இன்தமிழே ஓங்கிநிற்கும்
சிங்களத்தை அறியாதார்
இருப்பார் எனினும்
செந்தமிழை அறியாதார்
இலரென்றே சொல்லிடலாம்
இசுலா மியர்க்கும்
இன்தமிழ்க்கும் இருக்கின்ற
உறவதுவோ குருதியுடன்
கலந்த ஒன்றே

தங்களது தாயகத்தை
தமிழ்மக்கள் மீட்பதற்கு
தயாராம் போது
சிங்களவர் சினந்தெழுதல்
இயல்பன்றே இங்குள்ள
இசுலா மியர்கள்
செங்குருதி சிந்தியேனும்
எதிர்த்திடுதல் வேண்டுமென
இயம்பு கின்றீர்
சொந்தநலன் கருதியன்றி
வேறென்ன காரணமோ
சொல்லு வீரே

உம்மினத்தின் நலனதிலே
உமக்கிருக்கும் அக்கறையால்
உரைக்க வில்லை
உம்மினத்தின் பெயர்சொல்லி
உம்பதவி காப்பதற்கே
உளறு கின்றீர்
உம்மவரின் நலனுக்காய்
உம்மினத்தைப் பலியிடாதீர்
உம்மிற் பார்க்க
உம்மினத்தின் நலனைத்தான்
உயர்வாகக் கொண்டிடுக
அழகும் அதுவே

வடகிழக்கில் மட்டுமன்றி
வாழிடங்கள் எங்கணுமே
முஸ்லிம் மக்கள்
தொடர்ந்துபல இன்னல்களுக்
குட்படுத்தப் பட்டாரே
அவரின் துயரை
துடைப்பதற்கு எவர்வந்தீர்
என்செய்தீர் ஆட்சியினில்
ஒட்டி இருந்தீர்
துடிக்கலையே உம்மிதயம்
கொதிக்கலையே உம்குருதி
துத்தூ துத்தூ

இனவுணர்வை மதவுணர்வை
கிளறிவிட்டு பேரவையில்
இடம்பிடிக்க
முனைகின்றீர் முஸ்லிம்கள்
விழித்துவிட்டார் ஏமாற்றி
வோட்டெடுக்க
நினையாதீர் நேற்றுவரை
இருந்தவர்கள் இன்றில்லை
இன்றிருப்போர்
இனியுமது பேச்சுகளை
செவிமடுக்கார் செயல்களையே
எண்ணிப் பார்ப்பர்

தங்களது தாய்மொழியாய்த்
தமிழ்மொழியைக் கொண்டவர்தாம்
வடக்கில் கிழக்கில்
தங்கியுள முஸ்லிம்கள்
தமிழருக்கும் அவர்களுக்கும்
பிரச்னை ஒன்றே
இங்குதடு மாறுகின்ற
சந்தர்ப்ப வாதமுஸ்லிம்
தலைவ ரிதனை
கொஞ்சமுமே உணராமல்
பிரிவினையை எதிர்த்திடுதல்
மடமை யன்றோ

சந்தர்ப்ப வாதிகளைத்
தலைவர்களாய்க் கொண்டஒரு
சமூகம் என்றும்
முன்னேற முடியாது
முஸ்லிம்கள் நன்கிதனை
உணர்ந்து நாட்டில்
இன்றுள்ள பிரச்சினையை
தீர்த்துவைக்க சமூகத்தின்
இடரைக் களைய
பின்நிற்காத் தலைவரையே
பின்பற்றல் வேண்டுமதே
பெருமை சேர்க்கும்

* (முற்றும்) *

# காவலூர் ஜெகநாதனின் 'நாளை' நாவல்

— கலாநிதி க. அருணாசலம் —

ஈ[illegible]தமிழ்ச் சமூகத்திற் கொழுந்துவிட்டெரி[illegible]ம் பிரச்சினைகள் பலவும் ஏமாற்றுத்தனங்களும் நாவலில் முக்கித்துவம் பெற்றுள்ளன சீரழிந்து கொண்டிருக்கும் சமூகத்தில் இடம்பெறும்சாதி வெறியாட்டம், இனவெறிக்கொடுமை முதலியனவும் கடந்த சில ஆண்டுகளாக இலங்கையர் வெளிநாடுகளுக்குச்சென்று பணம் திரட்டும் முயற்சியிலே தீவிர கவனம் செலுத்துவதால் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் விளைவுகள், தமிழ் இளைஞர்கள் மத்தியிற் புயலாக உருவாகிக் கொண்டிருக்கும் அதிருப்தி மனப்பான்மை, மனக்குமுறல்கள், ஆளுவோரின் கெடுபிடிகள், தமிழ்த்தலைவர்களின் கையாலாகாத்தனம், தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெறும் இராணுவ அட்டூழியங்கள் முதலியனவும் கதைப்போக்கோடு ஒட்டி மிக்க நிதானமாக அலசப்பட்டுள்ளன. எழுச்சியுற்றுக்கொண்டிருக்கும் இளம் தலைமுறையினருக்கும் சிதைவுற்றுக் கொண்டிருக்கும் முதிய தலைமுறையினருக்குமிடையிலான அதிருப்திகள், முரண்பாடுகள், மோதல்கள், மாற்றங்களை விரும்பாத முதிய தலைமுறையினரின் நப்பாசைகள், ஏக்கங்கள், மனப்பொருமல்கள், அங்கலாய்ப்புக்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சி முதலியன இந்நாவலில் வியக்கத்தக்க வகையிற் காட்டப்பட்டுள்ளன.

இளைஞனாகவிருந்தும் நாவலாசிரியர் இன்றைய நிலைமைகளையும் போக்குகளையும் எவ்வளவு தூரம் நிதானமாகவும் ஆழமாகவும் நோக்கியுள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது. முதிய தலைமுறையினர் எல்லோருமே முற்போக்குக் கருத்துகளுக்கோ சமுதாயமுன்னேற்றத்திற்கோ எதிரிகளல்லர்; அதே போன்று இளையதலை முறையினர் எல்லோருமே முற்போக்குக் கருத்துக்களையோ சமுதாயமாற்றத்தையோ வரவேற்று ஆதரிப்பவர்களுமல்லர். இளையதலைமுறையினரிலும் சமூகவிரோதியான செல்வலிங்கத்தைப் போன்றோர் உள்ளனர். பெண்களைப்போகப் பொருட்களாகக் கருதிச் சுவைத்து விட்டு எறியும் குமாரவேலுகளும் எவ்வித இலட்சிய நோக்குமற்ற சிவராமன் போன்ற போலிகளும் உள்ளனர். முதியதலைமுறையினரிலும் "...முன்னேறியிட்டம் என்கிறது. காசிலை வலுக்கிறது மட்டுமில்லை. இண்டைக்கும் அதே மனநிலையிலைதான் எல்லோரும் இருக்கினம். நீறுபூத்த நெருப்பாக கிடக்குது... எப்ப ஒண்டுமில்லை, எல்லாம் சமம் எண்டு முழுசா ஆகிறியளோ அது மட்டும், நீங்க ஏதோ முன்னேறிட்டம் எண்டு நினைச்சுச் சோர்ந்து போகப்படாது சோரவிடாமல் மேளம் அடிச்சுக் கொண்டுதான் இருப்பன்..." எனக் குமுறும் நல்லான்களும் நாகன்களும் உள்ளனர் என்பதை நாவலாசிரியர் கதைப்போக்கினூடே சுட்டிக்காட்டத்தவறவில்லை.

சமூகத்துக்குப் பெரியவர்களாகவும் தர்மகர்த்தாக்களாகவும் நடித்துத் திரியும் பழைய தலைமுறையினரின் வரட்டுக்கௌரவம், சாதித்திமிர், அரக்க மனப்பான்மை, போலிப் பெருமைகள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழைகள் ஆகியோரின் எழுச்சியையும் முன்னேற்றத்தையும் முளையிலேயே கிள்ளி எறிந்து தமது தலைமைத்துவத்தையும் சுரண்டலையும் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் புரியும் ஈவு இரக்கமற்ற கொடுமைகள், அவற்றை மூடிமறைப்பதற்குக் கையாளும் தந்திரோபாயங்கள் நயவஞ்சகத்திட்டங்கள் முதலியவற்றின் மொத்த உருவமாக இந்நாவலிற் செல்வலிங்கமும் அவரது பரிவாரங்களாகத் தலைமை வாத்தியார் தணிகாசலம், செல்லத்துரை முதலியோரும் படைக்கப்பட்டுள்ளனர். காணி அறுதி எழுதிக் கொடுத்த கடனை விசாரிப்பதற்குக் கண்மணியின் வருகைக்காகக் காத்திருக்கும் செல்வலிங்கத்தின் மனம் பலவாறுகப் பொச்சரிக்கின்றது. இச்சந்தர்ப்பத்தில் நாவலாசிரியர் போற்றத்தகுந்த வகையில் நனவோட்ட உத்தியைக் கையாண்டு செல்வலிங்கத்தின் இளமைக்காலத் திருவிளையாடல்களை காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாவலில் வரும் பாத்திரங்களுட் செல்வலிங்கம் நாவலாசிரியரின் அற்புதப்படைப்பாக அமைந்துள்ளது.

இன்றையசமூகத்திற்கிராமப்புறங்களிலும்சரி நகர்ப்புறங்களிலும்சரி சமூகத்தை ஏமாற்றிச் சுரண்டிக் கொழுக்க முயலும் செல்வலிங்கங்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிருர்கள். கோயில்கள், சமயம், நீதி சாஸ்த்திரங்கள், சாதிஆசாரம். முதலியன அவர்களுக்குத் துணைச்சாதனங்கள். காலம் காலமாக இடம்பெற்றுவந்த இவர்களது சமூக மேலாதிக்கம். ஏமாற்றுவித்தைகள், ஏழைகளின் உழைப்பைக் கொடூரமாகச் சுரண்டி அவற்றில் ஒரு சிறு பகுதியைத் தர்மப்பணிகள் என்ற பெயரிலே தானம் செய்து மக்களை ஏமாற்றித் தர்மகர்த்தாக்கள் என்ற விருதினைப் பெறுதல் முதலியன இன்றைய மாறுதல்களுக்கு தாக்குப்பிடிக்க முடி

யாது உடைந்து நொருங்கித் தகர்ந்து கொண்டிருப்பதைச் செல்வலிங்கம், தலைமை வாத்தியார் முதலிய பாத்திரங்களின் உரையாடல்கள், செயற்பாடுகள், சிந்தனையோட்டம், மனப்பொருமல்கள், அங்கலாய்ப்புகள் முதலியன மூலம் துல்லியமாக நாவலாசிரியர் வெளிப்படுத்தியுள்ளமை பாராட்டத்தக்கது.

''கோயில் விசயத்தில் கள்ளக்கணக்கு எழுதுவது, கூட்டுறவுச் சங்கத்தில் எலிவிளையாட்டுக் காட்டுவது, தன்பாட்டுக்கு ஓடும் லோஞ்சினால் காசு வாருவது, நிலபுலங்களை விளைய வைப்பது...... வட்டிக்கு நகைகளும் காணிகளும் ஈடுபிடிப்பது, தீவுக்கே 'ராசா' மாதிரித்தட்டிக் கேட்க ஆளில்லாமல் சுக போகத்தில் இருப்பது, அவ்வளவுமே வாழ்க்கையாக இருந்தது செல்வலிங்கத்திற்கு'' ஆயின் அந்த வாழ்க்கைமுறை இன்று சரிந்து சிதைந்து கொண்டிருப்பதையே வெவ்வேறு உத்திகள் மூலம் நாவலாசிரியர் மிக அநாயாசமாக வெளிப்படுத்தியுள்ளார். குடும்பி!...... அந்தக்காலம் எப்பவோ மறைஞ்சுபோச்சு... நீ இன்னும் அந்தக் காலத்திலேயே நிற்கிறாய்'' ''குடுமியின்ரை கதை இனியும் செல்லாது. அவன்ர லோஞ்சாம், லோஞ்சோட பிறந்தவனே...... எல்லாம் நம்மட்ட வறுகிச் சேர்த்த காசு'' ''இனியும் பொறுக்க ஏலாது. எல்லாத்துக்கும் தலைகுனிஞ்சு நிண்ட காலம் மலையேறிப் போச்சுது'' இவை செல்வலிங்கத்திற்கெதிராகப் பரந்தாமனால் எறியப்பட்ட வெடிகுண்டுகள்.

செல்வலிங்கம் — பரந்தாமன் மோதல்' தங்கரத்தினம் — பரந்தாமன் முரண்பாடுகள்' நல்லான், நாகன், — குமரேசன், செல்வராணி, சின்னத்தம்பி தகராறுகள் முதலியன கேவலம் தனிமனித முரண்பாடுகளோ பெற்றோர் — பிள்ளைகளுக்கிடையிலான சண்டை சச்சரவுகளோ அல்ல; சீரழிந்து கொண்டிருக்கும் சமுதாய அமைப்புக்கும் எழுச்சியுற்றுக் கொண்டிருக்கும் புதிய சக்திகளுக்குமிடையிலான இறுதிப் போராட்டங்களே எனலாம். அந்தப் போராட்டத்தில் இரத்தக்களரிகள், உயிரிழப்புகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. பரந்தாமன்கள் சிலர் உயிர்த்தியாகம் செய்யவேண்டிய அல்லது பிற்போக்காளர்களின் சதித்திட்டங்களுக்கு இரையாக வேண்டிய நிலைமை ஏற்படலாம். ஆயின் அசுர வேகத்திற் பாய்ந்து வரும் காட்டாற்று வெள்ளத்தினைச் செல்வலிங்கங்களோ தலைமையாசிரியர்களோ அணைபோட்டுத் தடுக்கமுடியாது, தடுத்தாலும் அது தற்காலிகமானதே. எதிர்க்க முயலும் செல்வலிங்கங்களும் தணிகாசலங்களும் தலைமை வாத்தியார்களும் அழிந்தொழிவது உறுதி என்னும் உண்மை நிலையை நாவலாசிரியர் மிக்க சூசகமாக நாவலின் பிற்பகுதியிலே வெளிப்படுத்தியுள்ளமை வரவேற்கத்தக்கது. நிகழ்கால நிலைமைகளை அலசுவதுடன் எதிர்கால ஒளியைச் சுட்டிக்காட்டி நம்பிக்கையூட்டுவதும் ஓர் இலக்கிய கர்த்தாவின் தலையாய கடமைகளுள் ஒன்றெனலாம்.

இன்றைய சமுதாயச்சீரழிவிற்குப் பொருளாதாரக் காரணிகளே அடிப்படை என்பதை நாவலாசிரியர் பல இடங்களிலே துலாம்பரமாக்கியுள்ளார்! வடக்கரையைப் பகுதியில் வாழும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் இப்பொழுது தலைநிமிர்ந்து வரு[illegible] செல்வச் செருக்குடைய சாதிவெறிய[illegible] அடாவடித்தனத்துக்குச் சவால் விடு[illegible] சிந்தனையைத் தூண்டும் வகையில் அமை[illegible]ந்துள்ளன.

நல்லவனாக மட்டும் வாழ்ந்தாற் போதாது நல்லவனாகவும் வல்லவனாகவும் வாழ்ந்தால் தான் சமூகத்திற்கு ஏதாவது உருப்படியான நன்மையைச் செய்யமுடியும். சமூகத்திற்கு நன்மை செய்யவேண்டும். அநீதிகளுக்கு இடமளிக்கலாகாது என விரும்பும் நல்நெஞ்சங்கள் கூடத் தமது பலவீனத்தாற் செல்வலிங்கத்தின் முன்னால் வாய்மூடி மௌனிகளாகிவிடுகிறார்கள்; அவரோ பெரியவர்; அவரோடை ஏன் பகைப்பான்; நாமுண்டு நம்ம பாடுண்டு என ஒதுங்கிக்கொள்ளும் கோழைத்தனம் தான் சமூகத்தில் மேன் மேலும் தீமைகள் மலியத்தூண்டுதலாகின்றது என்பது நாவலின் பல இடங்களிற் சூசகமாய்ப் புலப்படுத்தப்பட்டுள்ளது. இதனாலேயே பாரதியாரும் 'வருகின்ற பாரதத்'தில் 'சிறுமை கண்டு பொங்குவாய் வா வா வா' என வரவேற்கிறார். சீரழிந்து கொண்டிருக்கும் இன்றைய சமூகத்துக்குத் தங்கரத்தினங்களும் சிவராமன்களும் அல்ல, பரந்தாமன்களும் செல்வராணிகளுமே தேவை.

இன்று தமிழுலகிற் பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் 'அழகினை'யும் நாவலாசிரியர் கதைப் போக்கோடு ஒட்டிச் சித்திரிக்கத்தவறவில்லை. பாரதியாரைப் பற்றியே கேள்விப்படாத, கவிதையைப் பற்றியோ சுதந்திரத்தைப் பற்றியோ அறியாத சமுதாய விரோதிகளே பாரதி நூற்றாண்டு விழாக்களுக்குப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வதும் தலைமை தாங்குவதும், பாரதிவிழாவில் பாரதியாரைப் பற்றியல்ல, தங்கள் பெருமைகளைப் பற்றிச் சொற்பொழிவாற்றுவதும் அப்படியொன்றும் தமிழுலகுக்குப் புதியனவல்ல. இதனையே மிகுந்த நகைச்சுவையுடனும் மரத்துப் போயிருக்கும் உள்ளங்களைச் சிறிதள்ளாவது சிந்திக்கத் தூண்டும் வகையிலும் இக்கதையிலே காட்டியுள்ளார். செல்வலிங்கத்தின் 'உத்தம' குணங்களையும் 'ஒப்பற்ற சமூகசேவை'களையும் நாவலின் தொடக்கத்திலிருந்து இறுதிவரை நன்கு அறிந்து கொண்டு செல்லும் வாசகன் இத்தகைய 'மகா உத்தமன்' பாரதி நூற்றாண்டு விழாவுக்குப் பிரதம விருந்தினராகத் தங்கரத்தினம், சிவராமன் ஆகியோரால் அழைக்கப்படுவதை அறிந்து பேரதிர்ச்சிக்கு உள்ளாகலாம். ஆயின் என்ன செய்வது! இது

நாவலாசிரியரின் வெறும் கற்பனை அல்லவே! கூறுவதற்கு கூச்சமாக இருந்தாலும் ஜீரணிக்கக் கஷ்டமான உண்மையே என்பதை நாம் நடைமுறையிற் காண்கிறோம். வாசகனின் உள்ளத்தைத் துணுக்குறச் செய்யும் இக்கட்டம் நாவலாசிரியராற் காட்டப்பட்டிருக்கும் வகை எவரது உள்ளத்தையும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டுகிறது.

நாவலில் இடம்பெறும் கதாநாயகன் — கதாநாயகி காதலர்களாக விளங்க வேண்டும்; அவர்களது அழகினையும் அங்கலட்சணங்களையும் உச்சி முதல் உள்ளங்கால் வரை வருணிக்கவேண்டும்; அவர்களது காதல் லீலைகளை காமக்களியாட்டங்கள், கும்மாளங்கள் ஆகியவற்றை வாசகர்களது உள்ளத்தைச் சுண்டியிழுத்து மயக்கும் வகையில் விளக்கிக் காட்ட வேண்டும். அதுவே நாவலுக்குச்சிறப்பளிப்பது என அழுங்குப் பிடியாகப் பின்பற்றும் தமிழ் நாவல் உலகின் பொதுவான போக்கிற்குமாறாக இந்நாவல் அமைந்துள்ளது. காதல் கிளுகிளுப்புகளுக்கும் அட்டகாசங்களுக்கும் கும்மாளங்களுக்கும் அங்க வருணனைகளுக்கும் இடமளியாது விட்டுள்ள அதே சமயம் கதை தொடக்கத்திலிருந்து முடிவுவரை மிகச் சுவாரஸ்யமாகவும் வாசகர் மனதை ஈர்த்துச்செல்லும் வகையிலும் அமைந்துள்ளமை பாராட்டத்தக்க ஒன்றாகும்.

அன்றாடம் வாழ்வில் நாம் காணும் பல ரக மனிதர்களையும் மனித உருக்கொண்ட அரக்கர்களையும் இந்நாவலிற் காணலாம். "எத்தனை விநோதம் எல்லாம் வந்திட்டுது...... நிம்மதியாய் வாழ்ந்த காலங்கள் எல்லாம் போச்சு,...... எல்லாம் போச்சு" என அங்கலாய்க்கும் தங்கரத்தினம் ஆங்கிலத்தை ஒரு மொழியாக மட்டுமல்லாமல் ஆயுதமாகவும் பாவிப்பவர். அது கூட குமாரவேலுவின் ஜேர்மன் மொழிப்பேச்சை எதிர்க்க முடியாது பின் வாங்குகிறது. 'நான் கவிஞன் என்ர வேலை எழுதிறது. அதைப் படிச்சுச் செயல்படுகிறது மக்கள்' எனக் குதர்க்கம் பேசும் சிவராமன், குனிந்த முதுகு குனிந்தபடியே இருக்கப் பாய்ச்சல் நடையில் பறையடித்துச் செல்லும் நல்லான், செல்வலிங்கத்தின் சாதித் திமிருக்கு எதிராகச் சவால் விடும் நாகன், தந்தையை நோக்கி "அப்பா! பிள்ளைப்பாசம் வேணும்தான்; ஆனால் சமூகத்திலையும் பாசம் வேணும் ஒன்றையொன்று தடுக்கக்கூடாது" என உபதேசம் செய்யும் பரந்தாமன், மன வுறுதியும் சமயோசிதமும் நிதானமும் எதனையும் சிந்தித்துச் செயற்படும் மனப்பக்குவமும் தெளிந்த வர்க்கப் பார்வையும் உடைய செல்வராணி, சமூகவிரோதியான செல்வலிங்கம், அவரது பரிவாரங்கள் எனப் பலதரப்பட்ட பாத்திரங்களையும் சிறந்த முறையில் யதார்த்தத்துக்குப் புறம்பாகாது படைத்துள்ளார்.

புத்துலகைச் சமைப்பதிற் பெண்கள் தீவிர பங்கெடுக்கவேண்டும் எனப்பாரதியார் ஆவலுற்றார். "நாளை" நாவலாசிரியரும் புத்துலகைச் சமைப்பதிற் பெண்களும் பங்குகொள்வது மட்டுமல்ல அதற்கான இயக்கத்துக்குத் தலைமை தாங்கி நடாத்தும் ஆற்றலும் அவர்களுக்கு உண்டு என்பதை நிரூபித்துக் காட்டும் வகையிற் செல்வராணி என்னும் பாத்திரத்தின் செயற்பாடுகளை நாவல் முழுவதும் காட்டியுள்ளார்.

சில ஆண்டுகளுக்கு முன்பு இந்நாவலாசிரியரின் கன்னிப் படைப்பான 'சொந்தங்கள் தொடர்கின்றன' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும் விமர்சனமும் குண்டசாலையில் இடம் பெற்றபோது ஆசிரியரது சமூகப்பார்வை, இலக்கிய நோக்கு, வர்க்கக் கண்ணோட்டம் ஆகியன குறித்து அன்று சிலர் எள்ளி நகையாடிக் கேலிசெய்யப் பின் நிற்கவில்லை. அத்தகையவர்களுக்குச் சவால் விடும் வகையில் "நாளை" நாவல் வெளிவந்துள்ளது. இவ்விடைப்பட்ட குறுகிய காலப் பகுதியுள் சிந்தனைத்திறன், சமூகப் பார்வை, ஆளுமை, கலைத்திறன் ஆகியவற்றிற் பிரமிக்கத்தக்க வளர்ச்சியை ஜெகநாதன் அடைந்துள்ளார். இளைஞனான இவரது எதிர்காலவளர்ச்சி பூரண நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளது. தமிழ்ப் புனைகதை உலகிற்கு வாய்த்த புதல்வர்களுள் ஒருவராகத் திகழ்வார் என்பதில் ஐயமில்லை.

## வருத்தம்

பெண்ணேதான் நான் - ஓர் நாள்
பெயர் கொடுத்தேன் 'நண்பர் வட்டத்திற்கு'
ஏனெனில்,
இலக்கிய ரசனை மிக்க
"நண்பிகள்" ஓர் சிலரை
இதயத்தில் ஏற்பதற்காய்
ஆறுலும்.........
என்னே ஏமாற்றம்
எத்தனையோ கடிதங்கள்
அத்தனையும் ஆடவர்கள்
சுத்த மோசம்
எடுத்தவுடன் அலட்டல்கள்
நண்பிகள் கிடைக்கவில்லை
நான் விட்ட பாடில்லை
பெண்ணான நானும்
பெரும் பிழைதான் செய்துவிட்டேன்
பொன்னான என் பெயரை
புதுப்பெயராய் மாற்றிவிட்டேன்,
ஆடவன் பெயர் எழுதி
அனுப்பினேன் மீண்டும் அங்கே!
அப்பாடா!
பெண் பிறவி உள்ளதுவே !
பெருமை தான் நாட்டிற்கு
வந்தது உடன் பதில்கள்
வருந்தினேன் "உலகை" நினைத்து!

— பாலையூற்று அஷ்ரபா —

கைலாசபதியின் மறைவும் சிந்தனைகளும்:

# சில விளக்கங்களும் - சில தரிசனங்களும்

— சு. வில்வரத்தினம் —

(கடந்த இதழ் தொடர்ச்சி......)

இதுமட்டுமன்றி யாழ்ப்பாணத்தில்நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டின்போதுகூட இவர்கள் சரியான பங்களிப்பை நல்காது பொது மக்கள் அபிப்பிராயத்தை பேணி நடக்காததும், அதேவேளை மதுரையில் நடந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் அநியாயமான பணவிரயத்தையும், சரியான முறையில் ஆய்வுபூர்வமான மாநாடாக அமையாது வெறும் அரசு விளம்பரக் 'கும்பமேளா' வாக ஆக்கப்படுவதையும் எதிர்த்து தமிழகத்திலுள்ள தர்மசக்திகளும் 'இலக்கு' கலாசார அமைப்பும் விடுத்த வேண்டுகோளைப் புறக்கணித்து கைலாசபதி, சிவத்தம்பி முதலியோர் கலந்துகொண்டதும் நாமறிந்ததே. ஆனால் அங்கே கலந்து இங்கே திரும்பிய பின் கவிஞர் முருகையன் 'மதுரை மீனாட்சி, சேற்றில் என்னடி மாக்கோலம்' என்று கவிபாடவும் டொமினிக் ஜீவா - மல்லிகையில் மதுரை தமிழாராய்ச்சி மாநாட்டுக்கு ஆதரவாக பெரிதாய் தலையங்கம் முழங்கிய பின் தமிழகம் சென்று மீண்டதும் - 'அநாவசியச்செலவுகள்' என்று முணுமுணுத்ததும், தமது கட்டுரை புறக்கணிக்கப்பட்டதால் சிவத்தம்பி 'முகத்தை நீட்டிய' சங்கதியும், என்னவிருந்தாலும் 'கைலாசபதி ஒரு அமர்வுக்குத் தலைமை வகித்தாராக்கும்' என்று இவர்கள் விழுந்தாலும் மீசையில் மண்படவில்லை' என்றபாங்கில் சமாளித்ததும் நாமறிந்ததே. ஆனால் தமிழகத்தில் 'இலக்கு' கலாசார அமைப்பு பயனுள்ள வகையில் பல ஆய்வு - அரங்குகளை நடாத்திவருவது இன்றும் தொடர் தமிழ்ப்பணியாக ஆரவாரமின்றி நிகழும் ஒரு உதாரணமாக இருக்கிறது. ஆகவே முற்போக்கு எழுத்தாளர் சங்கம் இனியேனும் தர்மத்தின் குரலுக்கேற்ப தன்னை விரித்து ஏனைய தர்மசக்திகளோடு இணைந்து, தன்னை முன்னிறுத்தாது ஈடுபடவேண்டும். இல்லையேல் எதிர்காலம் இவர்களை உதறிவிடும். கைலாசபதி புராணபடனம் இவர்களைக் காப்பாற்றுது என்பதை இவர்கள் உணரவேண்டும்.

இறுதியாக மு. தவின் மறைவுக்குப் பின் நிகழ்ந்த கிரியைகள் பற்றிய சிறுவிளக்கம்; உண்மையில் அவரின் எதிர்பாராத மறைவுக்குப்பின் நிகழ்ந்த கிரியைகள் பற்றி - பிராமணிய சடங்குகள் ஏதும் இல்லை பிரச்சினை கிளப்பும் மனநிலையில் மு. தவின் சகோதரரோ அவரது இயக்கத்தவரோ இருக்கவில்லை. அவரது மறைவால் மனம் நொந்திருந்த அவரது மனைவிவழி உறவினர்கள் மத்தியில் அப்பிரச்சினைகளை கிளறுவது ஒரு இழவு வீட்டை கலக வீடாக்குவதில் முடிந்திருக்குமேயன்றி அமைதியான முறையில் அதை நடாத்தி முடிக்கும் நடைமுறை யதார்த்தத்தை ஒட்டியதாயிருந்திராது. ஆனால் அவரது சடலம் எரிந்து முடிந்து 'அஸ்தி' சேகரிப்பதிலிருந்து அவரது நாற்பதாம் நாள் வைபவம் வரையும் குடிமை முறைகளை விலக்கி மு. த. வின், சகோதரரும், அவரது இயக்க நண்பர்களும் தாமேதான் சகலதையும் முன்னின்று செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. மு. த. மறைந்த நாற்பதாம் நாள் - அவரது மறைவை ஆத்மீக நெறிக்கமைய 'மகாசமாதி' என்றே குறிக்கும் அவர் சார்ந்திருந்த சர்வ மத சங்கத்தின் கோட்பாட்டின்படி - ஒரு பொது இடத்தில் தாழ்த்தப்பட்டவர் - உயர்வகுப்பினர் என்ற பேதமின்றி ஏழை மக்களுக்கு அரிசி - பொருள் தானம் வழங்கியும், அதேமுறையில் வருடந்தோறும் அவரது சிரார்த்த தினத்தை - பிராமணீய சாதி ஆசாரங்களை விலக்கி அவரின் குடும்பத்தவர் அனுட்டித்தும் வருகின்றனர் என்பதையும் இங்கு அறியத்தருகிறேன்.

அத்தோடு தளையசிங்கத்தின் சாதி எதிர்ப்பு போராட்டத்தின் போது ஒத்துழைத்த புங்குடுதீவு கிழக்குப் பிரிவினைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட குலத்தவர்களாகிய மக்கள் உயர் சாதியினரின் வீடுகளில் மரண வைபவங்களின்போது பறை கொட்டுவதையும், மரணக்கிரியைச் சடங்குகள், கல்யாண வைபவங்களின்போது பொதி சோறு பெறும் 'குடிமை' முறைகளையும் விலக்கிக்கொண்டுள்ளனர் என்பதும் தளையசிங்கம் நிகழ்த்திய போராட்டத்தின் இன்றைய பெறுபேறுகள் என பெருமையுடன்கூறிக்கொள்ளலாம். அத்தோடு தளையசிங்கம் சார்ந்திருந்த இயக்கத்தவர் தொடர்ந்தும் அம்மக்களின் நலன்களிலும் பொது நலன்களிலும் பங்கெடுப்பதும் அறியப்படவேண்டியதே. (முற்றும்)




[...]ரன்:- என்னையா மிகவும் யோசித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

எஜமான்:- புதிதாக எடுத்த காரை வெள்ளோட்டம் ஓடச்சொல்லி மகனிடம் கொடுக்க அவன் என்னடா என்றால் கந்தளாய் குளத்தில் கொண்டு இறக்கி விட்டான்.........

*  *  *

ஒருவர்:- என்னப்பா உன் பக்கத்திலே சோற்றுப்பார்சலை வைத்துக் கொண்டு ரயில் பாதையில் கழுத்தை வைத்துக் கொண்டிருக்கிறாய்?........

மற்றவர்:- தற்செயலாக ரயில் லேட்டாகி வந்தால் என்னை பட்டினிகிடந்தா சாகச் சொல்கிறாய்?.........

— பி. அருளானந்தம் —

தகப்பன்:- ஏண்டா, அந்தப் பணக்கார வூட்டுப் பொண்ணைக் காதலிக்கிறாயே...... அதெல்லாம் நமக்குச் சரிப்பட்டு வருமாடா..?

மகன்:- அந்த ஏழை வூட்டுப் பொண்ணைக் காதலிக்கிறபோ, நீங்கதானே சொன்னிங்கப்பா.........புடிச்சாப் புளியங்கொப்பாய் புடியடான்னு!

*  *  *

அவர்:- இன்றைக்குத்தான் வெளியாலை வந்தனான்......

மற்றவர்:- அப்படியா...... அங்கே எப்படி உங்கடை நயஞ் சுகங்கள்......?

அவர்:- அங்கே வேளை தவறாமல் சாப்பாடு.. வேலையில்லாப் பிரச்சனை கிடையாது....கடன்காரர் தொல்லை இல்லை......

மற்றவர்:- ஆஹா! அது எதப்பா அந்தப்புண்ணியம் செய்த நாடு...?

அவர்:- அட நீயும் என்னவோ...... அது நாடில்லை; மறியல் வீடு!

*  *  *

வந்தவர்: உங்க பெரியவராலை எனக்கொரு காரியமாக வேணும்...... ஏதாவது "சம்திங்" வேணுமென்றாலும்.. ...

சிற்றூழியர்: சேச்சே... அவர் யாரிடமும் கைநீட்டி "சம்திங்" அது இது என்று வாங்க மாட்டார் ஆனால்...

வந்தவர்: ........?

சிற்றூழியர்:நான் தான் அவருடைய பொக்கற்... ஹி!! ஹி!! ஹி!!

*  *  *

அவர்: நான் உனக்கு நூறு ரூபாய் ஒரு நோட்டாகக் கொடுத்தேனே... நீ இப்போது நாணயங்களாக தருகிறாயே...?

மற்றவர்: நீங்க பணம் கொடுக்கும் போது நாணயமாய்த் திருப்பித்தர வேண்டும் என்று தானே சொன்னீர்கள்!

அவர்: ...?...?...?

*  *  *

ஒருவர் தன் மனைவியை இப்படி எச்சரித்தார். இஞ்சை பார்... இனிமேல் என்னை இப்படிக் கண்டபடி திட்டினாயோ; என் ஹொண்டாவிலை உன்னைக் கொண்டு திரியமாட்டேன்!

*  *  *

வேட்பாளர்: வணக்கம்... கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போல நீங்களும் வருகிறீர்கள்!

வாக்காளர்: மன்னிக்கவும்...... எங்க வீட்டு வோட்டுகள் ஒன்பதையும் இம்முறை வாக்காளர் லிஸ்டிலிருந்து எடுத்து விட்டார்கள்...

வேட்பாளர்; (மனதுக்குள்) நல்ல வேளை உந்த வோட்டுகள் இருந்தாலும் நிச்சயமாக என் கட்சிக்கு விழாது!

— கதிர் மாணிக்கம் —

ஒருவர்: என்ன முப்படையும் வேலை நிறுத்தத்தில் குதித்திருக்கிறது சம்பளம் போதவில்லையாமே?

மற்வர்: இல்லை தங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளித்தால்தான் வேலைக்கு திரும்புவார்களாம்.

— கனக பிரதீபன் —

# பாரச்சிலுவைகள்

**— வன்னியூர் அன்ரனி மனோகரன்**



அந்த கரிய நிறமான போர்வையை மெதுவாக எடுத்து மேசையோரமாக வைத்த போது என் காதில் மோதிய குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன், "மோர்னிங் தமயந்தி" என்றபடி தனது மேசைக்கு போய்க் கொண்டிருந்தார், 'ராவ்ஸ்மன்' பீரிஸ். நானும் பதிலுக்கு 'மோர்னிங்' சொல்லி விட்டு, கதிரையை இழுத்து போட்டபடி அமர்ந்து கொள்கிறேன்,

"என்ன மிஸ்...? வந்ததும் வராததுமாக வேலையிலை இறங்கி விட்டீர்!..." என்று வழமை போல் சிரித்தபடி கேட்டுக் கொண்டு தனது சாப்பாட்டு பார்சலை றேயருக்குள் வைத்துக்கொண்டார்,

"அப்படியொன்றும் ஒபிஸ் வேக் இல்லை..... இது பிறைவேற்... என்ர பிரதருக்கு அப்ளிகேஷன் ஒன்று ரைப் பண்ண வேணும்...... அது தான்!......" அவரைப் பார்த்து சிரித்தபடி கூறிவிட்டு, வெள்ளை தாள்களை காபன் பேப்பருடன் சேர்த்து ரைப்றைற்றரின்மேல் வாயில் வைத்து குமிழை சுழற்றத் தொடங்கினேன் வேட்டி ஒரு பக்கமும் நடை- மறுபக்கமுமாக நடந்து வரும் சப்ஜெக்ட் கிளார்க் மரியாம்பிள்ளை, ..... உயர்ந்த தொனியில் கதைத்து ஓ!... என்று கூறிச் சிரிக்கும் ரீ ஓ யோன்பிள்ளை... வயதில் இளையவனான வேஜ் கிளார்க் ராஜன்... அதிகம் பேசாது... தான் இவர்களை விட பெரியவன் என்பது போல இருக்கும் மேற்பார்வையாளர் கிருஷ்ண பிள்ளை...... ஆகியோரின் பிரவேசத்துடன் காரியாலயம் களை கட்டத் தொடங்கியது.

மேசைகளை துடைத்து முடித்த பியோன், தும்புக்கட்டையை எடுத்து நிலத்தைக் கூட்டத் தொடங்கினான்.

நிதம் தனது பணத்தை சாராயத்துக்கு இரையாக்கி விட்டு... சிவந்த கண்ணுடன் வீடு செல்லும் சிவானந்தன்... எனது மேசைக்கு அடுத்து இருந்த தனது மேசைக்கு எதிரே வந்தமர்ந்தார்.

இரவு சாராய நெடி எனது முகத்தில் குப்பென்று அடித்தது; எனக்கு அவரைப் பார்த்ததும் ஒரு வித வெறுப்பு ஏற்படுவதிலும் பார்க்க... பரிவு தான் அதிகம் ஏற்படும் நேரகாலம் என்றில்லாமல் குடியில் மிதந்த என் அய்யாவின் ஞாபகம் தான் வரும். குடிக்கிறதுக்கு என்றேபிறந்த தொழில் அய்யாவின்ர தொழில்; ஆனால் சிவானந்தனின் உத்தியோகம் அப்படிப்பட்டது அல்ல. அப்ப ஏன் அவர் குடிக்கிறார்.

நேற்றுதான் அய்யா எங்கட வீட்டு திண்ணையில் இருந்து...... மாட்டுக்கள்ளனை தான் எப்படி வெருட்டி உண்மையை எடுத்தார் என்றதை சிரிக்சு சிரிச்சு சொன்ன மாதிரி இருக்கு......

எல்லாம் மூன்று மாதத்துக்கு முன் நடந்து முடிந்தது தான்.

ஒரு நாள் இரவு முழுதும் அய்யா சத்தி எடுத்தார்; நாங்களும் வழமையாக குடிச்சிட்டு வாறவர் என்று கவனிக்காமல் விட, நிலைமை மோசமாகி ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய்... ஒரு மாதமாக படுத்தபடுக்கையாக கிடந்தார். எல்லாத்துக்கும் குடிதான் காரணம்!... அவரை முழுக் குடிக்காரனாக்கிய பெருமை அவர் செய்த விதானை வேலையைத் தான் சாரும்.

ஈரல் கருகி போச்சாம்!... ஓ!... அதை நினைக்க இப்பவும் எனக்கு பயமாக இருக்கு!...... அவரின் வயிறு..... தலைக்கு மேலாக உயர்ந்து... கேட்ட கேள்விக்கு பதில் இன்றி... ஓ!... சாவு அவரைக் கொடூரமாகத் தான் வாட்டியது "செய்த அநியாயத்துக்கு .. அநுபவிக்கிறான் பாவி!..." வருத்தம் பார்க்க

# வாசகர் கவனத்துக்கு

## திருத்தி வாசிக்கவும்

'கைலாசபதியும் இலக்கியமும்' என்ற கட்டுரையின் 14-ம் பக்க முதற் கலத்தின் கடைசிப் பந்தியில் 'மக்கள் இலக்கியப் பெயருக்குள்ளமைபவர்கள் மாக்களுக்காக எழுத ஏனையோர் மக்களுக்காக எழுதுவோரல்லர்'' என்றிருப்பதை பின்வருமாறு திருத்தி வாசித்துக்கொள்ளவும் 'மக்கள் இலக்கியப் பெயருக்குள்ளமைபவர்கள் மக்களுக்காக எழுத ஏனையோர் மாக்களுக்காக எழுதுவோரல்லர்'

வந்தவர்கள் போகும் போது வீசிச் சென்ற வார்த்தைகள். அய்யாவுக்கு அருகே இரவு பகல் என்று நின்ற எனக்கு இவ்வார்த்தைகள் கேட்காமல் இல்லை.

எனக்கே தெரியும் எவ்வளவு அநியாயத்தை செய்தவர் என்று... ஒரு சின்ன வேலை... பிள்ளைக்கு கூப்பன் பதிய வேணும் என்றாலும்... அதுக்கு ஒரு போத்தல் சாராயம்!...... அன்று சனம் மனம் எரிந்து எரிந்து குடுத்த சாராயம் அவரின் ஈரலை எரித்ததை அவரால் உணர முடியவில்லை. அம்மா கூட சில வேளைகளில்... அதை நினைக்கும் போது கூட எனக்கு வெட்கமாக இருக்கும்.

''தம்பி!...... அவர் வெளியாலை போட்டார்!... எதுக்கும் நீர் இந்தப் போத்தலைக் கொண்டு போய் வாங்கி வந்தீர் என்றால் ..... வந்ததும் முடிச்சு தந்து விடுவார்......'' என்று அம்மா போத்தலை எடுத்து வந்தவனிடம் கொடுத்து விடுவாள். இவ்வளவுக்கும் அய்யா உள்ளே இருந்து கொட்டாவி விட்டுக் கொண்டு இருப்பார்.

வீட்டிலையே இப்படி என்றால்... ஊர் வழிய எவ்வளவு அநியாயத்தை செய்து இருப்பார்.

அவர் நினைச்சு இருந்தால் எவ்வளவை எங்களுக்கு செய்து இருக்கலாம் இருக்கிற வீடு கூட இப்பவும்ஓலை வீடுதான் என்னுடைய படிச்ச கள்ளிக்குளம் விதானையாரின்ர மகள்... இரண்டரை இலட்சம் சீதனத்தோட ஒரு டொக்டருக்கு மனைவியாகி விட்டாள்... என்ரை அய்யா என்னத்தை சேர்த்து வைச்சிருக்கிறார். ஆக மிஞ்சினால் குடிச்சுப் போட்டு வரும் போது ஒரு கட்டுக்குளத்து மீன் வாங்கி வந்தார். என்று தான் சொல்ல வேண்டும். தன்ர பிள்ளைகளை படிப்பிக்க வேணும்... அதுகள் முன்னுக்கு வர வேணும் என்ற ஆசை அவருக்கு இருந்திருந்தால்... இண்டைக்கு என்ர தம்பிகள் ஏன் ரவுடிகள் மாதிரி..... வெளிறின டெனிம் ஜீன்சையும் போட்டுக் கொண்டு.. வாயில் புகைக்கும் சிகரெட்டுடன் போற வாற பெட்டைகளுக்கு நக்கல் அடிச்சுக் கொண்டு... இன்னும் எனக்கு தெரியாமல் எவ்வளவு எல்லாத்தையும் செய்து கொண்டு நிக்கப் போகுதுகள்? ...

கடவுளே என்னை ஏன் இப் படிப்பட்ட சகோதரங்களோட பிறக்க செய்தாய்?...... என்னுடை படிச்ச பெட்டையள்... அவங்களைப் பற்றி என்னட்டை வந்து முறையிடேக்க..... நான் எவ்வளவு கூனி... குறுகி... என்னோட பிறந்ததுகள் நாலு தம்பிகளும் இரண்டு தங்கச்சிகளும் . இன்னும் இரண்டு தம்பிக்கு..... வயது வரேல்ல..... வந்தால் அதுகளும் என்ன செய்யிதுகளோ?... ஒரு தங்கச்சி குமராகிவிட்டது...... மற்றது நாளைக்கு என்ற மாதிரி வெருட்டிக் கொண்டிருக்கு......

அம்மா அன்று நினைச்சிருந்தால்.. இந்த நிலைமைய ஓரளவு திருத்தியிருக்கலாம் .. ஆனால் அவவும் அய்யாவோட சேர்ந்து குடிச்சுப் போட்டு கும்மாளம் அடிச்சு... இப்பத்தான் அவவுக்கு விளங்குது. ஆனால் நிலைமை தலைக்கு மேல வந்திட்டுது... அய்யா ஆஸ்பத்திரிக்கு போகேக்கை பதினைந்து பவுனில் இருந்த... தாலிவெட்டி... வெட்டி...... ஆறேழு பவுண் தான் இருந்தது... செத்த வீட்டோட அதுவும் அடைவுக்கு போட்டுது... அம்மாவும் தெரிஞ்ச ஆக்களிட்ட அழுது குளறி... இந்த தற்காலிக ரைப்பிஸ் வேலையை எனக்கு எடுத்து தந்திருக்காட்டி... என்ன நடந்திருக்குமோ எனக்கு தெரியாது?... மூத்த தம்பி ஏதோ 'ஆட்'வேலை எல்லாம் செய்வானாம்... கடைகளுக்கு 'போட்' எழுதி குடுக்கிறவனாம்... ஆனா அம்மாவுக்கு காசு குடுத்ததாக தெரியேல்ல... ஆனால் சாப்பாட்டு நேரத்துக்கு மட்டும் வந்து அட்டகாசப்படுத்திப் போடுவாங்கள்...

வீட்டை போனால் எனக்கு தலைதான் இடிக்கும்.

வாய்க்கு ஏற்ற வயதுக்கு தேவையான சாப்பாடு இல்லையென்று கத்தும் இளந்தாரிகள்... வெள்ளைக் கவுன் பழுப்பாகி விட்டது. புதுத்துணிக்கு காசு தா என்று அடம் பிடிக்கும் நேர் இளையவள் சுமதி... ஒவ்வொருவருக்கும் பிரச்சினைகள் !...

அம்மாவை பார்க்க எனக்கு பரிதாபமாகத்தான் இருக்கும்...

தோட்டத்தில் கை கொடுப்பதற்கு என்று ஒன்றும் இல்லை...

எல்லாரும் என்ர சம்பளத்தைத்தான் பார்த்துக் கொண்டு நிக்கினம்... நான் கூட எனக்கு ஒரு சாறி எடுக்க வழியின்றி... அய்யா வாங்கி தந்த அந்த இரண்டு சாறிகளையும் தோய்த்து... தோய்த்து கட்டிக் கொண்டு முழுச்சம்பளத்தையும் அம்மாவிடம் குடுத்துப் போட்டு அடுத்த மாத சம்பளத்தை பார்த்துக் கொண்டு இருப்பன்!.. எனக்கு நல்லா தெரியும் அதிலும் எனக்கு ஐஞ்சு சதமும் வராது என்று...... ஆனாலும் ஒரு நப்பாசை. "என்ன மிஸ்... வந்த நேரம் தொடக்கம் பார்த்துக் கொண்டு இருக்கிறன்... அந்த ரைப்றைற்றரை பார்த்துக் கொண்டு யோசிக்கிறீர்?..."

யோன் பிள்ளையின் கத்தல் என் காதில் விழுந்த போதுதான் நான் மேசை மேல் இருப்பதை உணர்ந்தேன்.

"சீ!... அப்படியொன்றும் இல்லை!......" நான் சிரித்து சமாளித்துக் கொள்கிறேன். "தமையந்திக்கு... அப்படி என்ன எங்களை மாதிரி...பிள்ளை குட்டிகளா?... யோசனை வாறதுக்கு!..." மரியாம்பிள்ளை சிரித்தார்.

"இன்னும் மிஸிஸ் ஆகவில்லையென்ற கவலைதான்!..." வெறிக்குட்டி சிவந்தனின் பேச்சுடன் சிரிப்பு பக்கென்று எழுந்தது.

தொடர்ந்து வந்த காரின் இரைச்சலுடன் சிரிப்பு சப்பென்று அடங்கி எல்லோரும் தமது இருக்கைகளில் அமர்ந்து கொள்ள தொடங்கினார்கள். இத்தனைக்கும் காரணம், காரில் வந்து இறங்கி தனது அறைக்குள் நுழைந்த மாவட்ட பொறியியலாளர் செந்தில்வேல்தான்.

வந்து ஒரு மாதத்துக்குள் எனக்கு இந்தக் காரியாலயம் நன்றாக பிடித்துக்கொண்டுவிட்டது. நான் மட்டும்தான் அங்கு வேலை பார்ப்பவர்களில் பெண். ஏனோ தெரியாது எந்த விதமான ஒளிவு மறைவும் இன்றி ஒரு பெண் இருக்கிறாளே என்ற கூச்சம் இன்றி எதையும் கதைப்பார்கள். தங்களது இரவு அனுபவங்களை கூட சில வேளைகளில் பகிர்ந்து கொள்வார்கள். எனக்குக்கூட ஆரம்பத்தில் ஒரு விதமாக இருந்தாலும் போக போக எல்லாம் பழகி விட்டது.

பெல் சத்தம் கேட்டு எழுந்து சென்ற பியோன் சிறிது நேரத்தின் பின் என்னை நோக்கி வந்தான்.

**நீர்ப்பாசனத் திணைக்களத் தமிழ்ப் பண்பாட்டுக்கழகம் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசு பெற்ற சிறுகதை**

நேற்று மாலை ரைப் செய்வதற்கு டிக்டேட் செய்த கடிதம் பற்றி இப்போதுதான் எனக்கு ஞாபகத்துக்கு வந்தது. காலையில் வந்ததும் முதல் வேலையாக செய்து விடலாம் என்றிருந்த நான்...... காலையில் வந்ததும் வராததுமாக தம்பிக்கு அப்பிளிக்கேசன் ரைப் பண்ணவேணும் என்று வெளிக்கிட்டு... அதையும் விட்டுட்டு யோசனையில் மூழ்கி சீ!... எல்லாம் வீட்டுக் கவலையாலைதான் வந்தது... ஒபிசுக்கு வந்திட்டால் வீட்டைப்பற்றி யோசிக்கிறதில்லை என்று முடிவெடுத்தும்... எல்லாம் கனவாய் போய்...

"இப்ப டி. இ. பேசப் போறார்... தந்த வேலையை ஒழுங்கா செய்தால் தானே வேலையை நிரந்தரமாக்கிறதுக்கு அவரிட்டை கதைச்சுப் பார்க்கலாம்... இப்ப எந்த முகத்தோட கேக்கிறது..."

"உங்களை வரட்டாம்!..." பியோன் கூறிவிட்டு போகிறான். நேற்று ரைப் செய்த ரெண்டர் விளம்பரத்தையும்.. இன்னும் இன்னும் சில கடிதங்களையும் எடுத்துக்கொண்டு அவரின் அறைக்குள்... புகுந்து "மோனிங் சேர்!..." என்றபடி நிற்கிறேன்.

அவரும் பதிலுக்கு 'மோர்னிங்' கூறிவிட்டு எதிரே இருந்த கதிரையைக் காட்டுகிறார்.

அமர்ந்தபடி நானே காரியத்தில் முந்துகிறேன் "சேர்!... நேற்று ஈவினிங் நீங்கள் ரிக்டேட் செய்த லெற்றரை இன்னும் முடிக்கேல்ல...... பை மினிற்ஸ் சில முடிச்சு தந்திடுறன்......" எனது படபடப்பே என்னை அவருக்கு காட்டிக் கொடுத்து விட்டது. "அதுக்கென்ன... இண்டைக்கு முடிச்சிட்டால் சரி...இன்றைய லெற்றர்ஸ் உடன் சேர்த்திட்டால் சரி... கெட் ஒபிசுக்கு இரண்டு லெற்றர் அனுப்ப வேணும்... இதைக்குறிச்சுக்கொள்ளும்..." என்றபடி சொல்லத் தொடங்கினார்.

பக் பக் என்று குளறி அடித்துக்கொண்டிருந்த மனம் இப்போதுதான் அமைதியடையத் தொடங்கியது.

வேகமாக எழுதியதால் ஏற்பட்ட வலியால் சுருண்டு போயிருந்த விரல்கள் வேலை முடிவடைந்த படியால் நிமிரத் தொடங்கின. சாசுவானமாக பேப்பரையும் பென்சிலையும் மேசையில் வைத்துவிட்டு லேஞ்சியை எடுத்து முகத்தில் துளிர்ந்த வியர்வைத் துளிகளை ஒற்றிக் கொண்டேன். இன்று முழுவதுக்கும் தேவையான வேலைகள் வந்து விட்டன-

போதாக் குறைக்கு யோன் பிள்ளைக்கு பீ. ஓ. ஜீ. ஒன்று ரைப் செய்ய வேணுமாம். டி, இ. தந்த ஐந்தாறு கடிதங்கள்,...... ரெண்டர் நோட்டீசுகள்......கட்டிடப் பொருட்கள் எடுத்து வருவதற்கு லொறி சாரதிக்கு உரிய கடிதம்...ரென்சில் ஒன்றும் கட் பண்ண வேணும். விரல்கள் துரித கதியில் இயங்கத் தொடங்கின.

இதுகும் ஏ, எல், எடுத்துப் போட்டு, சும்மா நிக்கேக்கை வேறை ஒரு காரணத்துக்காக ரைப்பிங் கிளாசுக்கு போக வேணும் என்று அய்யாவிட்ட கெஞ்சி......காசு கட்டி...எங்கே எல்லாம் திரிஞ்சு...... ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடி...இப்ப எல்லாத்துக்கும் சேர்த்துதான் அனுபவிக்கிறம்,

ஏ. எல் படிக்கும்போது தான் வசந்தனுக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. கொன்வென்றிலை படிக்கிற தன்ர சின்ன தங்கச்சியை கூட்டிக்கொண்டு வரேக்க சாதுவா என்னைப் பார்த்து சிரிக்கிறவர். ...அப்ப எனக்கு ஆள் யார் என்று தெரியாது, பிறகு நான் பள்ளிக் கூடம் விட்டு வீட்டை போகேக்கை......பிறத்தாலை வரத்தொடங்கி......அது என்ர சிநேகிதிகளுக்கு தெரிய வந்து அதுக்கு பிறகு என்னையும் வசந்தனையும் வைத்து ஒரே கிண்டல்...... 'ஏ. எல் பரீட்சையில் அவருக்குதானும் நல்ல றிசல்ட்டாம்......கட்டாயம் மெடிக்கலுக்கு என்ர பண்ணுவாராம்' ...என்ர சிநேகிதிகள் அடிக்கடி அவரைப் பற்றி சொல்ல சொல்ல.. என்ர மனமும் சலனப்பட்டு... ஒரு நாள் நானும் அவரைப் பார்த்துச் சிரிச்சன். ...பிறகு அந்த சிரிப்பு காதலாக மாறி......கடிதங்கள் பரிமாறத் தொடங்கி...ஆங்காங்கே ஒழுங்கைகளில் சந்திப்புகளும் ஏற்படத் தொடங்கின... பள்ளிக்கூடத்தில் ஏதாவது விளையாட்டு போட்டி அல்லது கலை விழா என்றால்......அவர் தன்ர பிரண்சோட வந்து......மூலையில் நின்று என்னைப் பார்ந்து சிரிப்பார்...அப்பவெல்லாம் எனக்கு எவ்வளவு பெருமை... அதெல்லாம் எவ்வளவு சந்தோஷமான காலம்......பிறகு ஸ்கூல் முடிந்த பின் வீட்டில் நிற்க வேண்டிய காலம்... அப்போதுதான் எனக்கு அந்த மூளை வந்தது. ரைப்பிங் கிளாசுக்கு போனால் வசந்தனை சந்திக்கலாம் .... அம்மாவிடம் கேட்டால் கட்டாயம் வேண்டாம் என்றுதான் சொல்லுவா...அய்யாவிட்ட ஒருநாள் மெதுவா கதையை விட்டு... ஒரு மாதிரி சம்மதம் எடுத்திட்டன் ...... சும்மா சொல்லக்கூடாது...... மூத்தபிள்ளை என்ற ரீதியில் அய்யாவுக்கு என்னிலை சரியான விருப்பம்...நான் சொல்ற எதையும் அவர் தட்டமாட்டார்.

நான் ரைப்பிங் கிளாசுக்கு போட்டு...இரவு ஏழரை மணியளவில் வாறது எல்லாம் அம்மாவுக்கு பிடிக்காத விஷயம்.... ...அய்யாவிட்ட சொல்லிப் பார்த்தா........ அவர் அதை பெரிசாக எடுக்கவில்லை அந்த காலத்தில் எங்கட காதல் கொடிகட்டிப் பறந்தது என்று தான் சொல்ல வேண்டும்.

ரீரூம் என்ன...? மெட்னி ஷோ என்ன?... பார்க் என்ன... ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு இடம்...... ஒழுங்கைகளில் சைக்கிள் பவனி என்ன? எல்லையில்லாது நீண்டு சென்ற எங்களது காதலுக்கு தடை வந்து சில நாட்களில் அவர் போய் விட்டார்.

போனவர் கடிதம் போடுவார்... போடுவார் என்று எதிர்பார்த்தது தான் மிச்சம். கொஞ்ச நாட்களாக நான் கடந்த அனுபவங்களை மறக்க முடியாமல் கஷ்டப்பட்டு எனக்குள்ளே நானே அழுது... அழுது... அதன் பின் தான் வசந்தனின் தந்திர புத்தியை என்னால் உணர முடிந்தது... நானே ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து எனது மனதை மாற்றிக் கொண்டேன். பிறகு எல்லாம் கனவாகபோயிட்டுது.

ஒருமுறை வஞ்சிக்கப்பட்டு விட்டனே...என்றதுக்காக இப்போதும் வலிய வந்து கதைக்கும் போய்சோட நான் கதைக்காமல் விடுவது இல்லை...... அதை எல்லாம் ஊர் எவ்வளவு கேவலமாக கதைக்குது... நான் நடத்தை கெட்டவளாம்!...

வசந்தனோட பழக்கம் எனக்கும் அப்போது தேவையானதொன்றாகத்தான் இருந்தது... இப்போது எல்லாம் வெறுமையாகி... எல்லாம் சப் என்ற மாதிரி இருக்குது...

ஊரை சொல்லி என்ன பிழை?........ எல்லாம் என்ர தான். என்ரை அய்யா... ஒரு கட்டுப்பாடான மனிசனாக இருந்து.... எல்லாத்தையும் கவனித்து வந்தார் என்றால் என் இஷ்டத்துக்கு எல்லாம் அவர் இசைந்திருக்க மாட்டார்; நானும் கூடாத பேர் கேட்டிருக்கவும் மாட்டன்.

நேரம் நாலுமணியை தாண்டி விட்டது.

எல்லோரும் வீடுபோவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். வேலையை முடித்து, மூடி வைத்து விட்டு அந்த கரியநிற போர்வையை எடுத்து தட்டச்சு இயந்திரத்தை மூடி வைத்து விட்டு...... நேரத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

ரவுனை தாண்டி... ஹொரவப் பொத்தானை வீதியில் ஏறுகிறேன்...... கடைகளுக்கு முன்னால் கொஞ்சம் பொடியள் நிக்கிறாங்கள்... அவங்கள் என்னைப் பற்றிக் கதைப்பது போன்ற உணர்வு......

“ஆடுறதை ஆடிப் போட்டு...... இப்ப பார் பத்தினி வேஷம்!...”

நான் சாறியால் தோளை போர்த்துக் கொண்டு போவது அவர்களின் கண்களுக்கு பத்தினி போல் தெரிகிறது போலும்?...

தவறணைக்கு முன்னால் மூன்று பேர்... குடிச்சுப் போட்டு நிறை வெறியில் பரத நாட்டியம் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

அந்த உயர்ந்த மரத்தை நோக்கி என் கண்கள் குவிந்தன... அய்யா... அந்த மரத்துக்கு கீழே தான் குடிச்சுப் போட்டு... ஆரோடையும் கதைச்சுக் கொண்டு இருப்பார்... நான் எத்தனை நாள் வந்து கூட்டிக்கொண்டு போயிருக்கிறன்.

சீ!... எவ்வளவு காலம் இருந்திருக்க வேண்டியவர்... எல்லாம் குடியாலை...வார்ட்டில் படுக்கையாக கிடக்கேக்கை... வாய் சாராயம், சாராயம் என்றுதான் புலம்பியது.

அந்தோனியார் கோவிலுக்கு முன்னாலை வரும் போது

தான் திரும்பிப் பார்த்தேன். எதிரே வரிசையில் சைக்கிளில் வசந்தன் வந்து கொண்டிருந்தார்.

மூன்று வருஷமாக அவராக தவிர்த்துக்கொண்டாரோ என்னவோ இன்றுதான் அவரை நேருக்கு நேராக காணுகிறேன்.

மீசை எல்லாம் வழிச்சு... ஆள் கொஞ்சம் நிறத்து...

என்னைக் கண்டதும் சைக்கிளை திருப்பி எனது ஓரமாக வருகிறார்; நான் அவரைப் பார்த்து மெதுவாக சிரித்துவிட்டு நிற்கிறேன்.

“இவ்வளவு நெருக்கமாக பழகிப் போட்டு...போய்... ஒரு கடிதம் போடவில்லையென்று சரியா கோபப்பட்டிருப்பீர் என்ன?...” என்கிறார். எனது கண்கள் கலங்குமாப் போல இருக்கு... அடக்கிக் கொண்டு நிற்கிறேன்.

சிறிது நேர அமைதிக்குபின் அவரே தொடங்கிறார்.

“எனக்குள்ள பொறுப்பு எல்லாம் உமக்கு தெரியும் தானே?... அதை மீறி என்னாலை ஒன்றும் செய்யேலாது!...”

என்றோ சொல்ல வேண்டிய ஆறுதல் வார்த்தைகள்; இன்று அவையெல்லாம் ஜீவனற்று மரத்துப் போய்......... தேவையில்லாத ஒன்றாகி விட்டது. நான் தலையை நிமிர்த்தி அவரைப் பார்த்தேன்

“அப்ப என்னோடை பழகும் போது... உந்த பொறுப்பு எல்லாம் எங்கே போட்டுது...” என்று கேட்பது போல் இருந்தது போலும்

“சொறி தமயந்தி... ஒரு ஆசையிலை பழகினது தான்... ஆனால் இப்ப எதிர் காலத்தை நினைச்சுப் பாக்கேக்க...” என்னைப்பார்த்தார் “அப்பகாத்திருக்கின்றன்...பொறுப்புமுடிஞ்சதும் என்னட்டை வாங்கோ ...” என்றுகேட்கவேணும் போலிருந்தது. அதற்கு ஒருநிறைவான பதிலை நான் அவரிட்டை எதிர் பார்க்கமுடியாது... ஏனென்றால் அப்படி ஒரு ஆசை அவருக்கு இருந்தால் கட்டாயம் சொல்லியிருப்பார்...... நான் நெடுநேரமாக பேசாமல் நின்றது... அவருக்கு ஒரு மாதிரியாக இருந்திருக்க வேணும்... “போட்டு வாறன்!...” என்று விட்டு சைக்கிளை உழக்கத் தொடங்கினார்.

பெருமூச்சை விட்டபடி நடக்கத் தொடங்கினேன்.

தறுதலைகளை தம்பிகளாகவும்... என்னையே எதிர்பார்த்து நிற்கும் தங்கைகளையும்...... சீரழிஞ்சுபோய் அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்று கிடக்கும் வீட்டையும் கொண்ட என்னிடம் வருவாரா அல்லது... கை நிறைய காசும்... வீடும் உள்ள பெண்ணைத் தேடிப்போவாரா?......

எல்லாம் நப்பாசை!...... விரலுக்கு தக்க வீக்கம் தான் வேணும்!

**

எனக்கு இன்று முழுவதும் வேலையே ஓடவில்லை... இன்று காலை இஞ்சினியரின் அறைக்குள் நுழைந்த போது......... கூறிய வார்த்தைகள்

“நாளையிலை... இருந்து எங்கட ஒபிசுக்கு... ரைப்பிஸ்ற்கெட் ஒபிசில் இருந்து ரான்ஸ்பரிலை வாறாவாம்... லெட்டர் வந்திருக்கு...நாளையிலை இருந்து அவ வேலைக்கு வருவாறு”

எனக்கு பேரிடி... பேரதிர்ச்சி... எவ்வளவு கொடூரமான செய்தி... நாள் ஒரு பொழுது போக்கிற்காகத் தான் வேலைக்கு வந்தனான் என்பது போல் அவர் கூறிக் கொண்டிருந்தார்.

கடவுளே!...... நான் வேலைக்கு போகாமல்நின்றால்... வீடு?... எனது நிலமை அவருக்கு எப்படி புரியும?......

‘டிக்டேட்’ செய்த கடிதத்தை எடுத்து வருகிறேனே தவிர மனம் வேலையில் ஈடுபடுவதாக இல்லை.

கட்டி வந்த சாப்பாட்டை சாப்பிடவும் மனம் இன்றி பொழுது சாய்கிறது. எல்லோரும் சந்தோஷமாக விடை தருகிறார்கள்.

எனக்கு தந்தையில்லை என்று தெரியுமே தவிர... போகும்போது வீட்டை குட்டி சுவராக்கி விட்டு சென்றார் என்றது அவர்களுக்கு தெரிய நியாயம் இல்லை... எனக்கு அழுகை அழுகையாக வருகுது.

கண்களை மெதுவாக துடைத்து விட்டு... எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டு வெளியேறுகிறேன்.

நடை மட்டுமல்ல மனமும் நன்றாக தளர்ந்து போயிருந்தது. எனது தம்பி ஒருவன் சிகரெட்டும் கையுமாக... சந்தியில் வெறித்துப் பார்த்துக் கொண்டு நிற்பது தெரிந்தது. அந்தோனியார் கோவிலை தாண்டும் போதுதான் என்னால் அக்காட்சியைக் காண முடிந்தது.

தங்கச்சி சுமதி... யாரோ ஒரு பொடியனுடன் கதைத்துக்கொண்டு நின்றாள்.

அவள் மூலமாகத்தான் சில நாள் வசந்தனுக்கு கடிதம் கொடுத்திருக்கிறன். அப்படிப் பட்ட நான் அவளை எப்படி தடுப்பது?...

நான் என்ன செய்வது?

உடல் நடுங்க, நடந்து கொண்டிருந்தேன். சந்தியில் நின்று வெறித்துப் பார்க்கும் தம்பி — கோவில் வளவுக்குள் நின்று கதைக்கும். தங்கை— நடத்துவோர் இன்றி சீரழிஞ்சு போய்க் கிடக்கும் குடும்பம்— பறிபோன எனது தற்காலிக ரைப்பிஸ்ற் வேலை — சப்பென்று வெறுத்து போய்க் கிடக்கும் எனது எதிர் கால வாழ்க்கை — இவற்றை எல்லாம் நினைக்க எனக்கு பயமாக கிடந்தது.

எது எப்படியோ?... நான் தான் சுமக்க வேண்டிய சிலுவைகள்!... எதிர் காலம் ஒரே இருள் மயமாக தெரிகிறது.

(யாவும் கற்பனை)

*

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

அவன் கொண்ட உறுதியில் உள்ள அழுத்தம் அவர்களது உறுதியிலும் உள்ளது.

இப்போதெல்லாம் அவனால் அவர்களுடன் தர்க்கம் செய்யமுடியவில்லை. தர்க்கம் செய்வதனால் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணமுடியாது என்பதை புரிந்துகொண்டான்போலும்.

உணர்வு பூர்வமான முடிவினால் தீர்வுகாணப் புறப்பட்டிருக்கிறான் என்று சொல்லவா? அவன் குடும்பத்தவர்களல்லவா உணர்வு பூர்வமாக உண்மையை அவனை உணர்ந்து செயல்படவேண்டும்? ஆனால் எதையும் உணராத நிலையில் அவன் குடும்பத்தவர்கள். மௌனமே மொழியாக அவன்.

முடிவு அவனுக்கும் அவர்களுக்குமிடையே பெரிய கேள்விக்குறியாக......

மரபை மீறவோ, பந்த பாசக்கயிற்றை அறுத்தெறியவும் அவனால் முடியவில்லை. வாழ்வே மாயம், வாழ்க்கையே வேஷம் என்று மனதில் அழுந்த எழுதிவிட்டு விரக்தியின் உச்ச நிலைக்குப் பின்னால் கொத்தடிமையாக அவனால் வாழ்ந்து மடியவும் முடியவில்லை.

அவனளவில் எதிர்காலம் என்ற ஒன்றே இல்லாத மாதிரி ஆகிவிட்டது. அவனைச் சுற்றிலும் பிரச்சினைகள் முட்டிமோதி நிற்கையில் அவனிடத்தில் அமைதிதான் எங்கே?

அவனைச் சுற்றிலும் உள்ள பிரச்சினைக்கு அவனால் சரியான தீர்காணவே முடியாமல் தனக்கும் குடும்பத்தவர்களுக்கும் அமைதியைத் தேடும் பொருட்டு அந்த அயல் நாட்டுச் சகோதரியை நாடினான். தன்னையிட்டு அந்தச் சகோதரி புரிந்துணர்வு மிக்கவளாய் மடல் வரைவதிலிருந்து தெரிந்திருந்தான். தன் இதய வேதனையை, பிரச்சினைகளை பக்கம் பக்கமாய் வரைந்து தனக்கும் குடும்பத்திற்கும் சாதகமான தீர்வு கேட்டு அனுப்பினான். ஒருதலைப் பட்சமாய் இல்லாமல் பதில் இருப்பாள் அந்த சகோதரி என்ற நம்பிக்கை அவனுக்கிருந்தது.

அவளுக்கு எழுதிவிட்டு ஆர்வப்பார்வையுடன் பதிலை எதிர்பார்த்து ஒரு வாரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

பதில் வந்தது. பார்த்ததும் அவன் ஆடிப்போய்விட்டான். பதிலோ அவனுக்கு சாதகமானதாய் அமைந்திருக்கவில்லை. இருப்பினும் அவன் மனதை ஆசுவாசப் படுத்திக்கொள்ளக்கூடிய ஆறுதல் வார்த்தைகளை அநாயாசமாய் அள்ளி வீசியிருந்தாள் அந்தச் சகோதரி.

“போராட்டங்கள் இல்லாத வாழ்க்கையே உலகில் இல்லை எனலாம். வாழ்க்கையே பெரும் போர்க்களந்தானே? வெற்றி பெறுவதும் தோல்வியை தழுவுவதும் அவரவர் விதிப்பயனே? விரும்பியதை அடைய முடியாமற் போவதும் விரும்பாததை அடைந்து விடுவதும்தான் அதிஷ்டமில்லாத பலரின் வாழ்க்கையாக இருக்கிறது. வாழ்க்கையில் இலட்சியங்கள் இருக்கத்தான் வேண்டும். இலட்சியங்களுக்காக வாழ்க்கையையே தியாகம் செய்வதென்றால்...... அது மிதமிஞ்சிய இலட்சியவெறியா? உறவுகளை உதாசீனம் செய்து இலட்சியங்களுக்காக வாழ்ந்து அமைதியைத் தேடிக்கொள்ள முடியுமா?” இப்படி நீளமாய் எழுதியிருந்தாள். இறுதியில்....

“அம்மா, அண்ணன் விருப்பப்படி அந்த பெண்ணை மணந்து கொள்வதோடு உங்கள் இலட்சியத்திலும் கண்ணாக இருக்கலாம். இலட்சியமும் இல்லமும் இனிதான வாழ்வும், இடையே இன்னலுமே வாழ்க்கையாகிறது” இதையெல்லாம் படித்தவன் கண்கள் இருண்டது. மனம் மருண்டது.

தன் நிலை புரிந்து எழுதிய அந்த சகோதரியின் வாசகங்களைக் கூட அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. “வாழ்க்கையில் புகுந்து விட்டால் இலட்சியத்தினால் ஏற்படப் போகும் பின் விளைவுகள் இன்னொருவரையும் பாதிக்கும். குடும்பமே சீர்குலையும். தன்னால் நிறைவான வாழ்வு வாழ முடியாமல் போகும். மற்றவர்களை மனம் நோக வைப்பதைக்காட்டிலும் நானே தனியனாய் அனுபவித்து விட்டு போகிறேன். இதனால் பாதிக்கப் படுபவன் நான் ஒருவனே!” என்ற சிந்தனைக்குப் பின் அவன் கொண்ட முடிவுகள்......

குடும்பத்தவர்கள் [illegible], பாசத்தை உதறினான். வாழ்க்கைமேல் இருந்த பிடிப்பு அந்த அகல்யாவோடு போனபின் அது எக்காலத்திலும் அவனுக்கு வேண்டாம் என்றானது. இலட்சியங்களே அவன் வாழ்க்கையாகி...... என்றும் போல் பிறர்சொல் கேட்டு செயல்பட விரும்பாதவனாய் சுயசிந்தனையில் தன் இலட்சியங்களுக்காக வாழ, போராட விடுதலைப் போராளியாக தன்னை மாற்றிக் கொண்டான். அவனுடைய முடிவுகளால் அவன் வாழ்க்கை இனி பெரிய கேள்விக்குறியாக முடியுமா?

(கற்பனையே)

## சூரியன்

பெரிய அண்டத்திற்கே மையமாகவுள்ள சூரியன் ஒரு நட்சத்திரம். ஆனால் அதைவிட மிகப்பெரிய நட்சத்திரங்களும் உள்ளன. அவற்றுள் பீட்டில்கீஸ் என்னும் நட்சத்திரம் சூரியனை விட 450 மடங்கு பெரியது.

தகவல்கள்— சிவமணி மாணிக்கவாசகர்,
காரைநகர்.